Not for sale

நவம்பர் - டிசம்பர் 2008

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# மலைப் பிரசங்கத்தின் படி ஜீவிப்பது எப்படி

பரிசேயர்களின் நீதியை மிஞ்சுதல் • முன்கோபி, வீணன் மற்றும் மூடன்

உன் எதிராளியோடு இணங்குதல் • உள்ளதை உள்ளது என்றும் • சத்துருக்களை நேசியுங்கள் • ஆண்டவருடைய ஜெபம் • நாங்கள் பிறருக்கு மன்னிக்கிறது போல

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறது? • நியாயந்தீர்க்காதீர்கள்

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்

மலைப்பிரசங்கத்தின் படி ஜீவிப்பது எப்படி

# ஆதியிலே

மத்தேயு 5-7 அதிகாரங்களின் மலைப்பிரசங்கம் பாக்கியவான் நிலையை அடைவதற்கான அறிவுரைகளின் மூலம் துவங்குகிறது. இதை வாசிக்கும் வாசகர்கள், *பாக்கியவான் நிலைக்கும் அதிகமானது* என்ற மையத் தலைப்பை கொண்ட 2005 ஜனவரி மாதப்பிரதி மற்றும் *பாக்கியவான் நிலையில் ஜீவித்தல்* என்ற மையத் தலைப்பை கொண்ட 2002 மே / ஜூன் பிரதியையும் மேற்கோள் காட்டப்படுகிறார்கள். *மலைப்பிரசங்கத்தின்படி ஜீவிப்பது எப்படி* என்ற பிரதியில் இந்த மாத பாக்கியவான் நிலையைக் கடந்து செல்ல இருக்கிறோம்.

*பரிசேயர்களின் நீதியை மிஞ்சுதல்*, பிறரைக்காட்டிலும் பரிசுத்தமுள்ளவர்களாக நம்மை கருதுகிறோமா என்று நாம் ஒவ்வொருவரையும் சிந்திக்கச்செய்கிறது.

வேறொரு சகோதரனை மூடனாக, அல்லது பாதகனாக நினைக்க "துவங்குவதே" கிறிஸ்தவனாக இருப்பதிலிருந்து வீழ்ச்சியடைவதற்கான படிகள் என்பது *முன்கோபி, வீனன், மற்றும் மூடன்* என்ற தலைப்பில் உணர்த்தப்படுகிறது. *உங்கள் எதிராளியோடு இணங்குதல்* நம்முடைய உணர்வுகளை கட்டுப்படுத்துவதில் கிடைக்கும் நன்மையை நமக்கு நினைவூட்டுகிறது. *உள்ளதை உள்ளதென்றும்*, அறைகுறை - உண்மை, "வெண்மை நிற சிறிய பொய்கள்" என்றழைக்கப்படுகிற, மற்றும் வேறுவிதமான வஞ்சனைகள் அனைத்தும் வெட்கத்திற்குரியது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. மனிதன் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும், நம்முடைய ஆண்டவர் அவைகளின் வழியாகப் பார்க்கிறார்.

நாம் நம்முடைய பகைவர்களையும் நேசிக்கக் கற்றுகொள்ள வேண்டியதின் அவசியத்தை *உங்கள் பகைவர்களையும் நேசியுங்கள்* நினைவூட்டுகிறது.

*ஆண்டவருடைய ஜெபம் குறித்த சில சிந்தனைகள்* நாம் உண்மையில் ஜெபிக்க வேண்டியவைகளின் மீது கவனத்தை ஒருமுகப்படுத்துகிறது. *நாங்கள் பிறருக்கு மன்னித்தது போல...எங்களுக்கு மன்னியும்* என்பதில் விளக்கப்பட்டுள்ளபடி, மன்னிக்கும் மனநிலை இல்லாமல் இருப்பது, தேவனிடம் நம்மை மன்னிக்க வேண்டாம் என்று வேண்டுவதற்கு சமம்.

*உங்கள் பொக்கிஷங்கள் எங்கே ?* எல்லாருடைய பார்வையிலும் கனமுள்ளதை செய்வதற்கும், தேவைகளை ஆண்டவர் செய்வார் என்பதை நம்பாமல் இருப்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் காண்பிக்கிறது.

வெளிப்புறத்தோற்றத்தின்படி பிறரை நியாயந்தீர்க்காதீர்கள் மாறாக நாம் நியாயந்தீர்க்கப்படாதிருக்க நம்மை நாமே நிதானிப்போம், என்பது நியாயந்தீர்க்காதீர்கள் தரும் செய்தியாகும். *அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்* வலிமைவாய்ந்த தலைமைப் பண்பை காட்டிலும் நன்நடத்தையின் மூலம் அளவிடப்படும், ஆவியின் கனியை நோக்கி கவனத்தை ஈர்ப்பது இக்கட்டுரைப் பொருளை நிறைவு செய்கிறது.

## நவம்பர் / டிசம்பர் 2008


✣ **ஆதியிலே ........................** 1
மலைப்பிதசங்கத்தின்படி ஜீவிப்பது எப்படி- மத்தேயு 5-7

✣ **பரிசேயர்களின் நீதியை மிஞ்சுதல் ........................** 2
5:17-20,61-8 நீங்கள் சுயநலமானவரா அல்லது சுயநலமற்றவரா?
வேதமாணவர்கள் இக்காரியத்தில் காக்கப்பட்டிருக்கிறார்களா?

✣ **முன்கோபி, வீனன்! மற்றும் மூடன்!** 6
5:21-24 தீமையை பேசுதலும், தீமையை பிணைத்தலும் தவிர்க்கப்பட வேண்டும்

✣ **உன் எதிராளியோடு இணங்குதல்** 7
525-26 பெருமையை விழுங்கு, கோபத்தை கட்டுப்படுத்து,
குறைந்தப்பட்சத்திற்கும் அதிகமாக செய்ய

✣ **உள்ளதை உள்ளது என்றும்** 8
5:33-37 சத்தியம், முழு சத்தியம், சத்தியத்தை தவிர வேறொன்றுமில்லை

✣ **சத்துருக்களை நேசியுங்கள் .......** 11
5:38-48 எவ்வாறு

✣ **ஆண்வருடைய ஜெபம் குறித்த சில சிந்தனைகள்** 12
6:9-13 நாம் மன்னிக்கப்பட விரும்புகிறோமா? மேலும், நாம்
எவ்வளவாக மன்னிக்கப்படவேண்டும் என்பதை மறந்திருக்கிறோமா?

✣ **நாங்கள் பிறருக்கு மன்னிக்கிறது போல..... எங்களுக்கு மன்னியும்** 13
6:12-15 நாம் மன்னிக்கப்பட விரும்புகிறோமா? மேலும், நாம் எவ்வளவாக
மன்னிக்கப்படவேண்டும் என்பதை மறந்திருக்கிறோமா?

✣ **உங்கள் பொக்கிஷங்கள் எங்கேயிருக்கிறது?** 17
6:19-34 மனுஷர் பார்வையில் கணமுள்ளதை செய்ய வேண்டும்,
ஆனால் எவ்வளவதிகமாக மன்னிக்கப்படவேண்டும்ன ன்பதை மறந்திருக்கிறோமா?

✣ **நியாயந்தீர்க்காதீர்கள்** 19
7:1-5, 1 கொரி 11:31-32 எப்படிப்பட்ட காரியங்களை (அல்லது ஜனங்களை) நாம்
நியாயந்தீர்க்கலாம், மேலும் எவைகளை நியாயந்தீர்க்கக்கூடாது?

✣ **அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்** 22
7:13-27 தங்களுடைய சுயத்தை கட்டுக்குட்படுத்தாதவர்கள், மற்றவர்களை
கட்டுக்குட்படுத்த அதிகமாக விரும்புகிறார்கள்.

**கவிதைகள் மற்றும் சிறு கட்டுரைகள்**
மரக்காலின் கீழ் வைக்கப்பட்ட விளக்கு — பின் அட்டை

மத்தேயு 5 : 17 - 20 ; 6 :1 - 8 - நீதியாக வாழ்வதா அல்லது நீதியாக தோன்றுவதா ?

# பரிசேயர்களின் நீதியை மிஞ்சுதல்



"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.." மத்தேயு 5:20

David Stein

இயேசுவுக்கு செவி சாய்த்த திரளான ஜனங்களுக்கு அவருடைய பிரசங்கம் சுத்தமான காற்றின் சுவாசமாக இருந்தது. நியாயப்பிரமாணத்தின் உண்மையான நோக்கத்தையும், ஆவியையும் மாற்றி இஸ்ரயேலின் போதகர்களுடைய மேன்மையையும், புகழையும், அந்தஸ்த்தையும் சட்டத்தின்படி போதிப்பதே சதுசேயர் மற்றும் பரிசேயரின் வழக்கமாயிருந்தது. இயேசு இவைகளுக்கு எதிரிடையாக எளிமையாகவும், உண்மையையும் பேசினதால் அவரது பேச்சைக் கேட்டவர்கள் கவரப்பட்டார்கள்.

இருதயத்தின் பரிசுத்தத்தையும், உண்மையையும் நீதியையும் புறக்கணித்த போலியான போதகர்களை இயேசு சுட்டிகாட்டினார். "மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷத் தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே."(மத்தேயு 23 :23,24)

நாம் இங்கு இயேசுவின் போதனைகளை தியானிக்கும்பொழுது, நாம் நீதியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ, எடுக்கும் முயற்சியில், நியாயப்பிரமாணத்தின் எழுத்துக்களில் மட்டும் அல்லாமல், அவைகளுக்குள் மறைந்திருக்கும் நோக்கத்தை அல்லது ஆவியை புரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியமாக உள்ளது. நம்முடைய கிறிஸ்துவ நடை நீதி மற்றும் அன்பின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இதை நம்முடைய வாழ்க்கையின் சொந்த கோட்பாடுகளாக நிலைநிறுத்தும் வரைக்கும் நாம் "பரிசேயர்களின் நீதிக்கு" அதிகமான நீதியை பிரதிபலிக்க முடியாது.

இயேசுவின் நீதியின் அடிப்படையில், நாம் தேவனை ஏற்றுக்கொள்வதற்கும், நம்முடைய அனுதின வாழ்வில் செயலாற்றும் நீதிக்கும் இடையில் உள்ள வித்தியாசங்களை நாம் சரியாக புரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. உண்மையில் "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல் இருக்கிறோம், **எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது,** ....."(ஏசாயா 64 : 6)

சட்டத்தின்படி நாம் தேவனுக்கு முன் நீதியாக நிற்பது, முழுமையாக கிறிஸ்துவின் நீதியின் மறைவில் இருப்பதினால் மட்டுமே. ஆகவே இயேசு சட்டத்தின் தேவைக்காக மட்டும் அல்ல, தன்னுடைய சொந்த செயல்பாடுகளிலும், நீதியிலும், தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கும் வளர்ச்சி அடையவேண்டும் என்று விரும்புகிறார்.

அடிக்கடி சரியான இடைவெளிகளில் நம்மை நாம் சோதித்து," வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமா ?என்று இயேசு எழுப்பின கேள்வியை நமக்குள் கேட்க வேண்டும். "நீங்கள் விசுவாச முள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறிவீர்கள். (11கொரிந்தியர் 13 :5)

நேர்மை, நீதியின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால் நேர்மையுள்ள வாழ்க்கையை வாழ, நம்மை ஊக்குவிக்கும் கருவி அன்புதான். "தேவன் அன்பாகவேயிருக்கிறார்" என்பதை போல நாமும் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் நீதியில் வளர வேண்டுமானால் அன்பை பிரதிபலிக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் "Philanthropy"(பிலாந்திரோபி) என்பதற்கு "மனிதனை (மனுக்குலம்) நேசிப்பவன்" என்று பொருள். நம் ஒவ்வொருவருடைய அயலகத்தாருடன் இருக்கும் உறவை இந்த அன்பு பிரதிபலிக்க வேண்டும். யேகோவா தேவன் இதற்காக தெய்வீக உதாரணத்தை தனக்குள்ளே வைத்திருக்கிறார்.

"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் (மனுக்குலம்) அன்புகூர்ந்தார். " (யோவான் 3 :16)

பரிசேயர்கள் பாரம்பரியத்தையும், பழக்க வழக்கத்தையும், நேசித்தார்கள். பண்டிகைகளின் நோக்கத்தை தவறான முறையில் திசை திருப்பி, ஒன்றுமில்லாத காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அவர்களுடைய இருதயத்தில் அன்பின் ஆவியை தொலைத்தார்கள். இயேசு எளிமையான ஆத்துமாவுக்கு உதவி செய்ய ஒரு அற்புதத்தை நடத்தும்பொழுது, இந்த பரிசேயர்களின் பகை அளவிடமுடியாததாக இருந்தது.

நம்முடைய ஆண்டவர் போலவே நாமும் இருக்க வேண்டும். நம்மை சுற்றியிருப்போரை விட நாம் தேவனை எந்த விதத்தில் அதிகமாக சேவிக்க முடியும் ? என்ற மேலான நோக்கத்துடன் தேவனுடைய சட்டங்களை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். "கொலை செய்யாதிருப்பீர்களாக " என்ற சட்டம் இருந்தபொழுது மற்றவர்களை பற்றி ஆழ்ந்து சிந்தித்து நம்முடைய இருதயத்தில் கூட அவர்களை காயப்படுத்த கூடாது என்று இயேசு போதிக்கிறார். மற்றவர்களை வெறுப்பதும், குற்றம் சுமத்துவதும் ஒரு கிறிஸ்தவனுக்கு கொலை செய்வதற்கு சமம் என்கிறார். இதற்கும் மேலாக கிறிஸ்தவ நிலைமை, மற்றவர்களை துக்கப்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும் என்பதே. இதற்கும் மேல் நாம் நீதியாக நடக்கவேண்டும். நம்முடைய நேர்மையான நல் நடக்கையின் கட்டளைகள், மற்ற அனைவரிடத்திலும், இரக்கத்தையும், கிருபையும் வெளிப்படுத்தக் கூடியதாகவும், நற்கிரியைகளை நடப்பிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். நமக்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மற்றவர்களுக்கு நன்மை செய்ய காத்திருப்பதே நேர்மையான நீதியின் செயலாகும்.

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக் கடவோம். "(கலாத்தியர் 6 :10) இந்த உலகத்தில் பொது மக்கள் மத்தியில் மற்றவர்களுக்காக கவலைப்படுகிற உண்மையான மக்களை கண்டுபிடிப்பது மிக அரிது. பொதுவாக மக்கள் சுய நலமும் , சுயகீர்த்தியை விரும்புவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே மற்றவர்களுக்காக கவலைப்படுகிற உண்மையான கிறிஸ்தவ மக்கள் விதிவிலக்காக தனித்திருக்கிறார்கள். நாம் இந்த விசயத்தில், நம்மேல் கவனம் வைக்காவிடில், மற்றவர்கள் தேவனை மகிமைப்படுத்துவதற்கு நாம் நிச்சயமாக வழி வகுக்க இயலாது. நாம் சத்தியத்திற்கும் தேவன் மற்றவர்களை ஆசீர்வதிக்கக்கூடிய சகலத்திற்கும் நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இதுவே பரிசேயரின் நீதியைக் காட்டிலும் அதிக நீதியாகும்.

பரிசேயர்கள் தங்களுடைய நீதியை வெளிகாட்டிக் கொண்டனர். மற்றவர்வர்களின் கவனத்தை ஈர்க்க, பொதுஇடங்களில் அவைகளை செயல்படுத்துவர். சிலர் உண்மையான பணிவை விட்டுவிலகி, மற்றவர்களை போல் இராததினால் தேவனை ஸ்தோத்தரித்தார்கள். "பரிசேயன் நின்று - தேவனே, நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்..."(லூக்கா 18:11,12)

நாம் இந்த வகுப்பினர்களை போல் இல்லை என்றும் அல்லது மற்ற சகோதரர் போல் இல்லை என்று நாம சிந்திக்கிறோமா ?

நம்முடைய சுயத்தை களைய அதிகமான பணிவு தேவைப்படுகிறது. ஏனெனில் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க இந்த ஒரு நிலையே எட்டி பிடிப்பது மிக அவசியமாயிருக்கிறது. நாம் நம்முடைய தாலந்துகள் மற்றும் திறமைகளை குறித்தே கவனத்தை செலுத்த கூடாது. இப்படியாக சுய கீர்த்திக்கான செயல்களை செய்தால் நாம் தேவனுடைய ஆவியை பெறாமல் பரிசேயரின் ஆவியை பெறுவோம். நாம் செய்யும் வேலைகள் மற்றவர்கள் அறியும்படி செய்யாமல் தேவன் மட்டுமே அறிந்தால் போதும் என்ற உணர்வோடு செய்யவேண்டும். மற்றவர்களிடமிருந்தோ அல்லது தேவனிடமிருந்தோ நாம் புகழ்ச்சியை பெறலாம், ஆனால் நம்மை நாம் புகழக்கூடாது. இதுவே பரிசேயரின் நீதியை காட்டிலும் அதிக நீதியாகும்.

நேர்மையான ஒரு உயர்ந்த நிலையை, எதிராளிகளை நாம் நோக்கும் விதம் நிர்ணயிக்கிறது. நம்மை நாம் காத்து, எதிராளிகளின் பயமுறுத்தல்களிலிருந்து விடுவித்து கொள்ளுவது இயற்கை. ஆனால் இயேசு நம்முடைய விரோதிகளை பொருத்த மட்டில் ஒரு வித்தியாசமான உபதேசத்தை கற்று கொடுத்திருக்கிறார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச்

செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள், அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்." (மத்தேயு 5 : 44,45)

இந்த போதனை உண்மையில் புரட்சிகரமாயிருக்கிறது, ஏனென்றால் இது இயல்புக்கு மாறாக சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நம்முடைய முழு நோக்கத்தை முற்றிலுமாக மாற்ற தேவைப்படுகிறது. மேலும் முழுமையான விசுவாசம் செயல்பட வேண்டியதாக இருக்கிறது. ஆனால் எதிராளி அகற்றப்பட்டு, முற்றிலும் அழிக்கப்படவேண்டும் என்பதே பரிசேயர்களின் நோக்கமாக இருந்தது. இதுவே அவர்கள் இயேசுவுக்கும் செய்தார்கள். ஆனால், இயேசு உண்மையில் யாருக்கும் எதிராளிகள் இல்லை என்று காண்பித்தார். அதேபோல் நாம் அனைவரையும், நம்மை பகைக்கிறவர்களையும் ஆதாமின் பிள்ளைகளாகவும், அவர்களுக்காக நம் இயேசு மரித்தார் என்பதையும் மற்றும் அனைவரும் மீட்கப்பட்டு, பூமியின் மேல் ஜீவனை பெறுவார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மேலும், கால போக்கில் இவர்கள் அனைவரும் நம்முடைய பிள்ளைகளாவார்கள், ஆகவே நம்முடைய எதிராளிகளை பகைக்கூடிய வெறுப்புள்ள பிராணிகளாக நாம் பார்க்காமல், அன்போடு, தேவராஜ்யத்தில் சீர் பொருந்தக்கூடிய மனித இனமாக பார்க்கவேண்டும். இதுவே பரிசேயர்களின் நீதியைக் காட்டிலும் அதிக நீதியாகும்.

பரிசேயர்களையும், சதுசேயர்களையும், மாயக்காரர்களென்று இயேசு கடிந்து கொண்டார். (ஸ்டராங்ஸ் -5273) மாயக்காரர்கள் என்பதற்கு "நடிகன்" என்று பொருள். ஒரு நடிகன் வேறு ஒரு பாத்திரத்தை நடிப்பவனாக இருக்கிறான். எந்த விதத்திலும் தன்னுடைய எந்த விதமான சொந்த குணங்களும் வெளிப்படுத்தப்படுவதில்லை. இந்த வார்த்தை பரிசேயர்களையும், சதுசேயர்களையும் வர்ணிக்க எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது. இவர்களே தெய்வீகமான நீதியுள்ளவர்களாய் பொது இடங்களில் நடித்தார்கள், ஆனால் அவர்களுடைய சொந்த குணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

"மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்கி கழுவுகிறீர்கள், உட்புறத்திலே அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடனான பரிசேயனே, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு. மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள், உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்." (மத்தேயு 23: 25 -28)

நம்முடைய குணத்திற்கும் செய்கைக்கும் எத்தனை வித்தியாசங்கள் ? நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களோடு இருக்கும் பொழுது ஒரு காரியத்தை போதித்து, அவர்களை விட்டு பிரிந்து போன பின் வேறொரு காரியத்தை செய்பவர்களாக இருக்கிறோமா? இடுக்கமான வாசல் வழியாக பிரவேசிக்கும் பொழுது நாம் சகோதரர்களோடு இருக்கும் போது நடந்து கொள்ளும் விதமும், இவர்களை விட்டு வெளி உலகத்தோடு இருக்கும் பொழுது நடந்து கொள்ளும் விதத்தை அடிப்படையாக வைத்துத் தான் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் முன்னேற்றத்தை அளவிட முடியும். நாம் அனைவருக்கும் அவரவருடைய சொந்த மாம்சீக பலவீனங்கள் இருப்பதால், நம்முடைய சகோதரர்கள் நம்மை காணவில்லை என்ற தைரியத்தினால், நம்முடைய வேலைகளிலும் வழியிலும், சத்தியத்தை அறியாத நம்முடைய குடும்பத்தார் மத்தியிலும் நம்முடைய உடன்படிக்கைக்கு விரோதமாக நடந்து, யாரும் நம்மை பார்க்க வில்லை என்று நினைக்கிறோம். ஒரு வேளை நம்முடைய சகோதரர்கள் நம்மை பார்த்து விட்டால் ? என்ற கேள்விக்கு நாம் பதிலை நிச்சயமாக சிந்திக்கூடியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு வித்தியாசமான வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருந்தால் நாம் நிச்சயமாக மாம்சத்தை ஜெயிக்கவில்லை என்று அறிந்து கொள்ளலாம்.

இந்த ஒரு சூழ்நிலையில் நமக்கு ஜெபமும், சில பொறுப்புக்களை ஏற்றுகொள்வதும் தேவைப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையில் எல்லா இடங்களிலும் நாம் இயேசுவை தரிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் பரிசேயர்களை போல் இராமல், இயேசுவின் சாயலை துல்லியமாக நம்முடைய குணங்கள் பிரதிபலிக்கக்கூடியவர்களாயிருக்கவேண்டும். நாம் பரிசுத்தமாகவும், நேர்மையாகவும் உண்மையானவர்களை போல் நடிக்கக்கூடாது, மனதார அன்போடும் உண்மையோடும் வாழ வேண்டும். இப்படிப்பட்ட ஒரு

உண்மையான வாழ்க்கையை நாம் வாழந்தால், அற்புதமான வாக்குதத்தங்கள் நிச்சயமாக நமக்கு காத்திருக்கிறது. "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக்கோபு 1:5) ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலிப்பியர் 2 : 13)

நாம் ஒத்துழைத்தால் நிச்சயமாக கிறிஸ்துவுக்குள் வளர்ச்சியடையும், முழுமையான அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புது இருதயத்தை நமக்குள் சிருஷ்டிக்க தேவன் வல்லவராக இருக்கிறார்- இதுவே நம்முடைய அழைப்பையும் தேர்ந்தெடுத்தலையும் உறுதிப்படுத்தக்கூடியதான அடிப்படைத் தேவையாக உள்ளது. மேலும், இதுவே பரிசேயர்களுடைய நீதியைகாட்டிலும் அதிகமான நீதியாகும்.

சத்தியத்தின் மிகபெரிய ஆசீர்வாதங்களை நாம் பெற நினைக்கும்பொழுது,நமக்கு இன்று சவாலாக இருக்கிறது. இயேசு மிக பெரிய ஆவிக்குரிய போஜன பந்தியை நமக்கு தந்திருக்கிறார் - இந்த சத்தியங்கள் இருள் காலங்களின் தவறுகளை புறம்பே எறிந்து, நம்மை மிகபெரிய வெளிச்சத்தில் நிறுத்துகிறது, ஆனால் இந்த மகத்துவமான சத்தியத்தை பெற்ற நமக்கு மேட்டிமையும், பெருமையும் நுழைந்து, இந்த ஆசீர்வாதங்களை பெறாதவர்களை குறைவாக மதிப்பிடும் படி ஏவப்படுகிறோம். இதை குறித்து அப்போஸ்தலானாகிய பவுல் கடுமையாக நம்மை எச்சரிக்கிறார். ".அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும். "(1கொரிநிதியர் 8:1)

இந்த அற்புதமான தேவ ஞானமும், திட்டமும் நம்மை சுத்திகரிப்பதற்காகவே நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. நாம் தாழ்மையாக இருந்து கற்று கொண்டால், தேவனுடைய கிருபையை பெறுவோம். இந்த ஞானத்திற்குரிய ஆசீர்வாதங்களை பெறாத மக்களை நாம் எந்த விதத்திலும் தாழ்மையுள்ளவர்களாக எண்ணக்கூடாது. மாறாக நாம் மற்றவர்கள் ஆசீர்வதிக்கக்கூடிய நிலைமையை பரிசாக பெறப்போகிறோம் என்பதை நினைத்து மனத் தாழ்மையாக இருக்கவேண்டும். ஞானத்தினால் வந்த பெருமையில் பரிசேயர்களும் மற்ற அநேகரும் விழுந்து போனார்கள். ஆகவே சத்தியத்தின் அறிவு நம்மை சுத்திகரித்து, நம்மை தாழ்மைப்படுத்தி, மற்றவர்கள் நம்மை விட மேன்மையுள்ளவரகளாக எண்ணக்கடவோம் (பிலிப்பியர் 2:3) இந்த வழியில் மட்டுமே நாம் பரிசேயர்களுடைய நீதியை காட்டிலும் அதிக நீதியுள்ளவர்களாக இருக்க முடியும்.

இயேசு தன்னுடைய மலை பிரசங்கத்தை முடிக்கும் பொழுது "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." (மத்தேயு 5: 48) என்கிறார்.

பூரணம் என்று மொழிபெயர்க்கப்பட்ட "teleios"(டெலியோஸ்) என்ற கிரேக்க வார்த்தைக்கு முழுமை என்று பொருள்படும். நாம் தேவனையும், இயேசுவையும் பற்றி அதிகமாக அறிந்து கொள்ளும்பொழுது அவர்களுடைய பூரணமான குணங்களை புரிந்துகொள்ளுவதில் வளர்ச்சி அடையவோம். இந்த பாடமானது, சத்தியத்தின் பயற்சியோடு நம்மை ஒவ்வொரு காரியங்களிலும் இயேசுவை தரித்துகொள்ள நமக்கு உதவி செய்யும். ஒவ்வொரு சிந்தையும் சம நிலைப்படுத்தப்பட்டு கிறிஸ்துவுக்குள் முழுகீழ்படிதலை கொண்டு வரவேண்டும். "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர் களாயிருக்கிறோம். "(11கொரிந்தியர் 10:5) இது தேவனுடைய கிருபையில் நிலைத்து நிற்க நமக்கு உதவும். ஆனால் இயேசுவின் ஆலோசனைகளோடு தேவனுடைய ஆவியின் வல்லமையை பெற்றால் , நாம் அனைத்தையும் ஜெயித்து பரலோகத்தின் பிதாவை மகிழ்விப்போம்.

இதற்குபலனாக , நாம் 11தீமோத்தேயு 2 : 15 ஆம் வசனத்தில் சொல்லப்பட்டவைகளை நம்முடைய வாழ்க்கையில் நிரூப்பிப்போம் "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. " மேலும், நம்முடைய விசுவாசத்தின் நீதியுள்ள போராட்டம் பரிசேயர்களுடைய நீதியை காட்டிலும் அதிக நீதியில் செயல்படுவோம். நாம் சோதனைக்கு உட்படாதபடிக்கு "தேவனே, நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்." (லூக்கா 18:11) என்று நாம் ஜெபிக்காமல் இருக்கவேண்டும்.

மத்தேயு 5:21 -24 - நாவும் நெருப்புத்தான்



# முன்கோபி, வீணன்! மற்றும் மூடன்!

"நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம், நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக (கெஹன்னா) அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது." - யாக்கோபு 3 : 6 [1]

James Parkinson

ஒரு சகோதரனுக்கு விரோதமாக பேசும் கடுமையான வார்த்தைகள் மற்றும் யோசனைகளை நம்முடைய ஆண்டவர் கொலை செய்வதற்கு சமம் என்கிறார். (மத்தேயு 5:22)"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் **கோபித்துக்கொள்பவன்** நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், தன் சகோதரனை **வீணனென்று** சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், **மூடனே** என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்."[2]

இந்த காரியங்கள் மிக தெளிவாகிறது. நாம் அதிகமான கோபம் கொள்ளும் பொழுது. நாம் நம்முடைய பொறுமையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து விடுகிறோம். "பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன், பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." (நீதிமொழிகள் 16:32)ஒரு வேளை இந்த விசயம் வழக்கிற்கு வந்தால் நாம் மறந்த, அல்லது பார்க்காத அல்லது சிந்திக்கவும் தவறின - எதிர் தரப்பு வாதத்தை கேட்காமல் இருப்போமா ? இவ்விசயத்தில் நீதிமன்றம் யாரை குற்றவாளியாக கருதும்?

நான் ஒருவனை **வீணனே** என்று அழைத்தால், ஆண்டவருக்கு முன் நான் ஒரு ஞானி என்று சொல்லுகிறேன் அல்லவா ? உச்ச நீதிமன்றத்தில் முக்கியமான வழக்குகள் விவாதிக்கப்படும், அதுபோல் ஒவ்வொரு சகோதரனும் தேவனுக்கு முக்கியமானவர்களே. நாம் நம்முடைய மீறுதலுகளுக்காக உணர்த்தப்பட்டு. நமக்கு முதலில் நம்முடைய இரட்சகர் தேவை என்பதை முதலில் உணர வேண்டும். - ஆகவே நாம் மற்றவர்களின் குறைகளை குறித்து மிகுந்த பொறுமையோடு இருக்கவேண்டும். "...அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும். ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால் ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை." (1கொரிந்தியர் 8 :1,2)

நான் ஒரு சகோதரனை **மூடனே** (அல்லது இது போன்ற வார்த்தைகள்) என்று நியாயந்தீர்த்தால், அவன் ஒரு வில்லன் என்றும், மனப்பூர்வமாக துன்மார்க்கனாக இருக்கிறான் என்றும் பொருள்படும் அல்லவா ? இப்படியிருக்க, அவனை இரண்டாம் மரணத்திற்கு தீர்க்கிறவனாக இருப்பேனே. "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்." (மத்தேயு 7 : 1) நான், என்னை அல்லது அவனை கிறிஸ்துவின் சரீரத்திற்கு வெளியே தள்ளிவிடுகிறவனாக இருப்பேனே, அதாவது நான் அல்லது அவன், இருவரில் ஒருவர், இரண்டாம் மரணத்திற்கு பாத்திரவானாகிவிடுவோம் அல்லவா ! இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை எடுத்து கொள்ள நான் ஆயத்தமா ?

"சாத்தான்" என்ற வார்த்தைக்கு குற்றம் சாட்டுகிறவன் என்று பொருள்படும். சகரியா 3 ஆம் அதிகாரத்தில் உண்மையான சபையை சாத்தான் குற்றம் சாட்டுவதை அடையாளமாக காட்டப்படுகிறது. சபை இயேசு கிறிஸ்துவுக்கு முன் நிற்பது போல யேகோவாவின் தூதனுக்கு முன் யோசுவா நின்றார். அப்பொழுது சபை அழுக்கு வஸ்திரம் தரித்திருப்பதாக சாத்தான் குற்றம் சாட்டுகிறான். உண்மையான சபை சுயமான நீதியை வெளிப்படுத்த முயற்சிக்காது."எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது.."(ஏசாயா 64 : 6)இந்த நிலையில், இயேசு கிறிஸ்து மட்டுமே , நீதியின் வஸ்திரத்தை நமக்கு அணிவிக்க முடியும்.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். "(மத்தேயு 6: 14,15) "என்னை மன்னிக்க வேண்டாம்" என்று யாராவது பரலோகத்தின் தந்தையை நோக்கி சொல்ல முடியுமா ?

விழுந்து போன மனிதன் கோபங்களை குவிப்பதற்கும் மற்றவர்களை அவதூராய் பேசுவதற்கு காரணங்கள் என்ன? "சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும், அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது, அவர்களுடைய பக்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்.." (தீத்து 1 : 15)மற்றவர்களுடைய பெரிதான குறைகளை அதிகமாக கண்டுபிடிப்பதின் நிமித்தம் நம்முடைய குற்றங்களை குறைவாக எண்ணி,குற்ற உணர்வுகள் அற்றவர்களாகக் காணப்படுகிறோம். நாம் இப்படிப்பட்டவர்களாக இருக்கிறோமா? என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கேட்போம்.

"அகந்தையினால்மாத்திரம் வாது பிறக்கும், ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு "(நீதிமொழிகள் 13 :10) வாதுகளை வளர்ப்பதினால், பெருமை வளர்ச்சி அடைந்து மனிதன் குருடாக்கப்படுகிறான். இதற்கு துவக்கம் வாக்குவாதமே. ஒருவனுக்குள் இருக்கும் பெருமை என்ற வியாதியே, அவன் எங்கு சென்றாலும், வாக்குவாதம் செய்ய,காரணமாக அமைகிறது. "நான் இப்படிப்பட்டவனா ? என்ற கேள்வியை நமக்குள் எழுப்புவோம் .

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, "(1கொரிந்தியர் 13 :4) "அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது, ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." (ரோமர் 13 :10) பிறனுக்கு நாம் இவைகளைச் செய்ய கடமைப்பட்டிருந்தால், உண்மையில் ஒரு சகோதரனிடம் இதற்கு மேலாக நாம் எவ்வளவு செய்ய கடமைப்பட்டுள்ளோம்.

1. வசனங்கள் ரிவைஸ்டு வெர்ஷனிலிருந்து (Revised Version) கொடுக்கப்பட்டுள்ளது.
2. சொல்லர்த்தமான, கெஹன்னா அக்கினியை வெளி 20 : 14 ஆம் வசனத்தில் "அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்." என்று சொல்லப்பட்டிருக்கிறது.
3. புதிய ஏற்பாட்டின் வைன்ஸ் எக்போசிட்டரி டிக்ஷனரி (Vine's Expository Dictionary of New Testament ) ஓர்கு என்ற கிரேக்க வார்த்தைக்கு (மத்தேயு 5:22 ), "நிதானமாக, தெளிந்த புத்தியோடு, அடிக்கடி பழிவாங்கும் உணர்வோடு இருக்கும் ஒரு மனநிலை" என்று பொருள்படுகிறது.

மத்தேயு 5: 25,26 - சீக்கிரமாக நல்மனம் பொருந்து

# உன் எதிராளியோடு இணங்குதல்



"பலவானைப்பாக்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன், பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் " - நீதிமொழிகள் 16 : 32

இயேசு "எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும் நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும் போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து. பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்."(மத்தேயு 5: 25,26)என்று சொல்லுகிறார். இந்த இடத்தில் எதிராளி என்பது சாத்தானை அல்ல, மாறாக நாம் தவறிழைத்ததின் நிமித்தமாக நமக்கு விரோதமாக எழும்பி சரியான வழக்கு தொடுத்தவரை இங்கு குறிப்பிடுகிறது. இந்த சூழ்நிலையில் இயேசு குறைந்த பட்சமான எதிர்ப்புகளை சகிக்கவும், விடுதலை பெறவும் மனப்பூர்வமாக நம்மை -" நீ உன் எதிராளியோடு ....சீக்கிரமாய் நல்மனம் பொருந்து" என்கிறார்.

இப்படியாக நாம் போய் ஒப்புரவாக்குவது, நம்முடைய கோபத்தை கட்டுப்படுத்துவதற்காக அல்ல. கோபம் எல்லை கடந்து போவது வியாதி அல்ல, அது பெருமை என்ற வியாதியின் முக்கியமான அறிகுறியாகும். "அகந்தையினால்மாத்திரம் வாது பிறக்கும், ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு."(நீதிமொழிகள் 13 :10)

பெருமை சாவான ஒரு எதிராளியாகும்.இந்த அண்டசராசரத்தில் பாவமில்லாத ஒரு காலத்தில், பெருமை லூசிபேரை பிடித்தது. (எசேக்கியேல் 28:17, ஏசாயா 14 :12 - 14) நமக்குள் புறையோடி நம்மை கொன்றுவிடும். நாம் ஒவ்வொருவரும் கண் அல்லது கையில் உள்ள புற்று நோயை வெட்டி எறிவதை போல நமக்குள் இருக்கும் பெருமையை வெட்டி எறிவோம்.

"கோபமுள்ள ஒரு வாதத் திறமைசாலி, கோபம் இழந்த ஒரு பட்டயம்" என்று மிகச் சரியாக சொல்லப்பட்டிருக்கிறது. (கோபமுள்ள ஒரு மனிதன் தன்னை பலசாலி என்று எண்ணலாம், ஆனால் ஆழமான பின்விளைவுகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும் என்பதை நினையாதிருக்கிறான்.)

கோபம் கொள்வது மிக தவறு, அதை கட்டுப்படுத்தாமல் விட்டு விடுகிறது அதை விட மிக பெரிய தவறாகும். "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் "(நீதிமொழிகள் 16 : 32)

கோபத்தை கட்டுப்படுத்த நாம் எவ்வாறு பயிற்சி பெற வேண்டும் ? ஒருவர் நம்மேல் எதை குறித்தாவது குற்றம் சாட்டினால், நாம் முந்தி செய்வது என்ன ? அவர்களுடைய குற்றத்தை எடுத்துரைப்பதாகும். நம்முடைய குற்றங்களையும், குற்ற உணர்வுகளையும் மறைப்பதற்காகவே நாம் இப்படி செய்து வருகிறோம். ஆனால் இனி நாம் அப்படியிராமல், ஒருவர் நம்முடைய குற்றத்தை எடுத்துரைக்கும்பொழுது அதை முதலாவது திருத்திக் கொள்ள முயற்சிக்கவேண்டும். இதற்காகவே தேவன் நமக்கு இரண்டு காதுகளையும், ஒரே நாவையும் கொடுத்துள்ளார், என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமக்கு கிடைக்கும் புகழ்ச்சியை காட்டிலும், குற்றசாட்டுகளில் அதிகமான ஆவிக்குரிய வளர்ச்சியை பெறலாம்.

நான் அதிகமான உணர்ச்சிவசப்படுகிறவனா? "அதிகமான உணர்ச்சிவசப்படுதல்" என்றால் 90% கோபமும், 10 % சிந்திக்கும் திறன் உள்ள நிலைமையாகும். இப்படியிருக்க, நான் சுயக்கட்டுபாட்டை வளர்க்கவேண்டும். இதை நாம் பயிற்சி எடுத்தால் மட்டுமே வளர்ச்சி அடையமுடியும்.

ஒருவர் என்னோடு முரண்படும் பட்சத்தில், அதை நான் தனிப்பட்ட முறையில் என்னை புறக்கணித்ததாக எடுத்துக்கொள்கிறேனா ? நான் சில சமயங்களில் முழுமனதாக சிலரோடு முரண்பட்டு அவரை ஒரு தனிப்பட்ட நபராக புறக்கணியாமல் இருக்கும் பொழுது, அதுபோல பிறர் என்னோடு முறண்படும் பட்சத்தில் அதை நான் அனுமதித்து அவர்கள் என்னை புறக்கணிப்பதாக கருதாமல் இருக்கவேண்டும்.

ஜனங்கள் நம்முடைய உணர்வுகளை அடிக்கடி காயப்படுத்துகிறார்களா ? விரோதியை வீழ்த்துவதற்கு முன்பு அவன் யார் என்று நான் அறிந்துகொள்வது அவசியம். புண்பட்ட உணர்வுகள் பொதுவாக புண்பட்ட பெருமைக்கு ஒத்த சொல்லாக இருக்கிறது.

**எதிராளிகள் மற்றும் குற்றசாட்டுகளும்**

பொதுவாக, இரண்டு எதிராளிகள் இருந்தால், ஒருவர் மற்றொருவரை அதிகமாக குற்றம் சாட்டுகிறவாராக இருக்கிறார். பெரும்பான்மையான சமயங்களில் குற்ற உணர்வு உள்ளவரே குற்றம் சாட்டுகிறவராக இருக்கிறார், ஏனெனில், குற்றமற்றவர் தன்னை நிரூபிக்கவேண்டிய அவசியம் இருப்பதில்லை. ("சாத்தான்" என்ற வார்த்தைக்கு குற்றம் சாட்டுபவன் என்று பொருள்படுகிறது) ஆகவே நாம் இப்படியிருந்தால், தீய எண்ணத்தையும், பேச்சுக்களையும் நம்முடைய இருதயத்தின் பிரதிப்பலிப்பாக்குவோம்.

ஒரு எதிர் தரப்பு வாதி நமக்கு எதிராக வழக்கு தொடுத்தால் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் ? ஆனால் நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம் ? " நீ அந்த அளவுக்கு பெரிய ஆளா?" என்ற பதில் சரியானதாக இருந்தாலும், நாம் சொன்ன இந்த பதில், நம்முடைய தறப்புக்கு பாதகமாகிவிடும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இதற்கு பதிலாக, எல்லாம் சரியாகிவிடுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கேட்டு அறிந்த பின் இதை சரி செய்ய தேவைக்கும் அதிக காரியங்களை நாம் மனத்தாழ்மையுடன் செய்தால், நம்முடைய தேவனின் குணத்தை பிரதிபலிக்கக் கூடியவர்களாயிருப்போம்.

"சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்." (மத்தேயு 5:9)

மத்தேயு 5 :33 -37 - நான் சத்தியத்தில் இருக்கிறேனா ? சத்தியம் எண்ணில் இருக்கிறதா ?



# உள்ளதை உள்ளது என்றும்

"தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை..." (வெளி 21 : 27)

Perry Robinson

இயேசு, "அன்றியும், பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம், வானத்தின்பேரில் சத்தியம் பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி, எருசலேமின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம் அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே. உள்ளதை உள்ளதென்றும், இல்லாதை இல்லதென்றும் சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். (மத்தேயு 5: 33- 37)

இந்த வேதாகம பகுதியை நாம் ஆராய்ந்து பார்த்தால், நூறாண்டுக்கு முன் சகோ. ரசல் இதற்கு கொடுத்த விளக்கத்தை விட அதிகமான விளக்கம் தருவது மிக கடினமாக உள்ளது.

> இந்த சட்டமானது "தேவனுடைய நாமத்தை வீணில் வழங்காதிருப்பீர்களாக" என்ற கற்பனையோடு சம்மந்தப்பட்ட ஏதோ ஒரு காரியத்தை குறித்து சொல்கிறது. மேலும், பாரம்பரியபழக்கங்கள், சட்டத்தை திருத்தி அமைத்து, தவறான ஆணையிடுவதற்கு வழிவகுத்தது. நம்முடைய ஆண்டவர் தவறுகளை சுட்டிக்காட்டி, மூன்றாவது கற்பனைக்குள்ள எல்லையையும், பாரம்பரிய பழக்கங்களை காட்டிலும் அதற்குள் மறைந்திருக்கும் ஆழமான அர்த்தத்தையும் கூறினார் - அதாவது தேவனுடைய நாமம் ஒருபோதும் எந்த ஒரு பணிவிணக்கமற்ற (மரியாதை இல்லாத) சூழ்நிலைகளிலும் பயன்படுத்தக்கூடாது. மேலும், சட்டத்திற்கு மாறாக எந்த விதத்திலும் தேவனுடைய பேரில் ஆணையிடவும் கூடாது என்றார். அந்நாட்களில் தங்களுடைய வேண்டுதல்களை உறுதியாக்கி கொள்ள இவர்கள் தேவன் பேரிலும், வானத்தின் பேரிலும் ஆணையிட்ட, பாரம்பரிய பழக்கத்தை தொடர்ந்து செய்யாமல் இருக்க சீஷர்களுக்கு அதிகதிகமாக இயேசு போதித்தார். இன்றைக்கு இயேசுவை பின் பற்றக்கூடிய சீஷர்களும் இதே பாடத்தை கடைப்பிடிக்கவேண்டும். சிலர் தங்களுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்த ஆணையிடுவது அவசியம் என்று எண்ணலாம். ஆனால் இயேசுவை பின்பற்றுபவர்களின் வார்த்தைகள், செயல்கள், மற்றும் ஜீவியமும் என்றுமே சத்தியமாகவே உள்ளது. இவைகளின் முடிவு சகலத்திலும் அதாவது முற்றிலும் உண்மையுள்ளதாகவே இருக்கும். ஆகவே இவர்கள் ஆம் என்றால் ஆம் என்றும், இல்லை என்றால் இல்லை என்பதே ஆகும்.

"இயல்பான சம்பாஷனைகளில் உறுதியளிப்பதும், ஆணையிட்டு உரைப்பதும், வாக்களிப்பவர் உண்மையை பேசுகிறாரா என்ற கேள்வி எழும்புகிறது - அதாவது அவர் ஆம் என்று சொன்னால் அது எப்பொழுதும் ஆம் ஆக இருப்பதில்லை என்று பொருள்படுகிறது. இவருடைய சாதாரன பேச்சுகளில் முக்கியத்துவம் இல்லாமல் அசட்டையாக பேசப்படுவதே இதற்கு காரணமாக அமைகிறது. இதன் விளைவாக இவர்கள் இயல்பாக பேசும்பொழுது, தேவனையும், மற்றும் பரிசுத்த மானவைகளையும் இவர்கள் பேசும் உண்மைக்கு சாட்சியாக அழைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் வார்த்தைகள் குறை மதிப்புள்ளதாக இருப்பதால், எளிதில் முறியக்கூடியதாக இருக்கிறது. ஆகவே தொடர்ச்சியாக ஆணையிடுவதும் , அதை முறிப்பதும் இப்படிப்பட்டவர்களுக்கு வழக்கமாகிறது. இவைகள் பொதுவாக மிகுந்த சீர்கேட்டுக்கு நடத்துகிறது. இதற்கு

எதிராக, எங்கெல்லாம் வார்த்தைகள் பரிசுத்தமும் உண்மையுமாக இருக்கிறதோ, அங்கு பாவம், தவறுகள் மற்றும் நேர்மையற்ற காரியங்கள் நிருத்தப்படுகிறது." - Reprints, p .3737

உண்மையில் தேவனுடைய ஆவியை பெற்றிருக்கும் ஒவ்வொருவரும்,"ஆவியில் விழிப்புள்ள சிந்தையை" பெற்றிருக்கிறார்கள் என்று பவுல் அறிக்கையிடுகிறார். இவர்கள் வெகு சீக்கிரத்தில் ஆணையிடுவதின் அறிவீனத்தை உணர்ந்து கொள்வார்கள். ஒருவர் அடிக்கடி ஆணையிட்டுக் கொண்டிருந்தால், உண்மையில் அவருடைய வார்த்தைகள் இயல்பாகவே உண்மையில்லாதது. என்று பொருள்படுகிறது. அதாவது அவருடைய எந்த வார்த்தைகளும் நம்ப தகுந்தல்ல என்பதே.

"எஜமானின் சொற்களை சற்று கவனியுங்கள், " ஆம் என்றால் ஆம் என்றும், இல்லை என்றால் இல்லை என்றும் சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். "நீங்கள் ஆம் என்று சொல்லும் பொழுது அது ஆம் ஆகதான் இருக்கவேண்டும், இல்லை என்று சொல்லும் பொழுது அது இல்லை என்பதாகவே இருக்கவேண்டும்" அதாவது உண்மையை மட்டுமே பேசவேண்டும் என்று நமதாண்டவர் பொருள் கூறுகிறார். இதன் நிமித்தமாக உங்கள் வார்த்தைகளை உங்கள் நண்பர்கள், அயலகத்தார்கள் மத்தியில் எவ்வளவு மதிப்புள்ளதாக இருக்கும். நீங்கள் இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்வீர்களானால், எந்த காரியத்திற்கும் நீங்கள் ஆணையிடவேண்டிய அவசியம் இராது. உங்களை நீங்களே நீரூபிக்கவேண்டிய அவசியம் இருக்காது. " - Reprints, p. 5020

நுண்ணறிவு பெற்றவர்கள் பயன்படுத்தும் வஞ்சகப்புகழ்ச்சி என்பது புண்படுத்தக்கூடிய நகைச்சுவையின் வேற்றுரூபமாகும். எப்படியெனில் இதை கூர்ந்து கவனித்தால்அது பொய் என்றும், உங்களோடு இருப்பவர்களுக்கு நீங்கள் பொய் சொல்லுவதை வெளிப்படுத்துவதும், அவர்கள் அனைவரும் நீங்கள் சொல்லவந்த காரியத்திற்கு நேர்மாரானதை புரிந்துகொள்ளவும் உதவுகிறது. உதாரணமாக, "அந்த சட்டை எனக்கு பிடித்திருக்கிறது" (சூழ்நிலைக்கேற்ற விதமாக ....குறும்புத்தனமான சிரிப்புடன் சொல்லப் பட்டது), என்பது " அந்த சட்டை எனக்கு பிடிக்கவில்லை" என்று பொருள்கொள்கிறது. இவ்வகையான, நன்மையல்லாத நகைச்சுவையை தேவனுடைய சித்தம் செய்ய தன்னை ஒப்புக்கொடுத்த ஒருவர் தியாகம் செய்வது அவசியம்.

உண்மை . பழமைவாய்ந்த ரோமாபுரியில், சிற்பாசிரிகள் தாங்கள் செய்த வேலைகளில் உள்ள தவறுகளை அல்லது தவறான இடங்களில் மெழுகை கொண்டு மூடுவது வழக்கம். இப்படியாக எந்த தவறு இல்லாமல், மெழுகை பயன்படுத்தாமல் செய்யப்பட்ட பொருட்களுக்கு மேல் ("sine cera") என்ற குறிப்பு காணப்படும். அதற்கு "மெழுகு இல்லாமல்" அதாவது உண்மையான என்று அர்த்தமாம். இதுவே "sincere " (சின்சியர்) என்ற ஆங்கில வார்த்தையின் தோற்றமாகும் (மூலம்). இந்த வார்த்தையில் பொருள் உண்மையாகும். - நீங்கள் சொல்லும் ஆம் , நிச்சயமாக ஆம் என்று இருக்கவேண்டும், அதுபோல நீங்கள் சொல்லும் இல்லை என்ற காரியங்கள் இல்லாததாக இருக்கவேண்டும்.

உண்மையை உச்ச நிலை மட்டும் கடைபிடிக்க முடியுமா ? இதை குறித்து சகோ. ரசல் எழுதும்பொழுது -

> "தேவனுடைய பிள்ளைகளில் சிலர், இந்த மாதிரியான காரியங்கள் உண்மையை அதன் உச்சத்திற்கு கடைப்பிடிக்க எத்தனிக்கிறார்கள். அநேகர் பவுலின் சார்பாக தங்களுடைய கடமை என்றுணர்ந்து பெலிக்ஸை முழுமையாக கண்டித்திருப்பார்கள். (அப்போஸ்தலர் 24) அதுபோல தேவனுடைய ஜனங்கள் தாங்கள் வீதியில் சந்திக்கிற ஒவ்வொரு தவறு செய்பவர்களையும் கண்டிக்கவேண்டிய அவசியமில்லை. " - Reprints, p. 3194

-அதாவது, உண்மை என்பது ஞானம், விவேகம், மற்றவர்கள் மீதான கரிசனை; அதாவது, அகாப்பே அன்பு என்பவைகளை குறிக்காமல், தேவனுடைய சித்தம் செய்வதில் பிறரோடு நாம் ஏற்படுத்தும் பாதிப்பிலிருந்து வேறுபடுகிறது. அதாவது, நீதியானது, அன்பு மற்றும் ஞானத்துடன் இசைந்து காணப்படவேண்டும். பொய் சொல்வது தவறு என்றிருக்கையில், ஒருவர் தேவையில்லாத விஷயத்தில் தலையிடுவது அல்லது அமைதலாயிருப்பது ஆகிய இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையை எடுக்கலாம்.

இதை குறித்து நம்முடைய ஆண்டவராகிய இயேசு ஒரு உவமையில் , "உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள், போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்."(மத்தேயு 7:6) என்று சொன்னார். இயேசு முத்துகளை விலையுர்ந்த சத்தியங்களுக்கும், இந்த சத்தியங்களை பாராட்டமுடியாதவர்களை பன்றிகளுக்கும் ஒப்பிட்டு பேசுகிறார். பொதுவாக பன்றிகளுக்கு உலகபிரகாரமான உணவு மட்டுமே தேவைப்படுகிறதே தவிற அவைகளுக்கு முத்துக்கள் தேவை இல்லை. ஒருவேளை அதற்கு முத்துக்கள் கிடைத்தாலும் அதை கால்களின் கீழ் மிதித்துவிடும். அதுபோல நீங்கள் சத்தியத்தை கேட்க விரும்பாத ஒருவருக்கு வலுக்கட்டாயமாக சத்தியத்தை போதித்தால், இருண்ட காலங்களில் நடந்தது போல, ஒருவேளை "திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடலாம்."

## அறைகுறை உண்மைகளை குறித்து நாம் என்ன சொல்லுவது -

ஆபிரகாம் சாராள் தன்னுடைய மனைவியாகவும் இருந்தால் என்ற உண்மையை மறைத்து தன்னுடைய சகோதரி என்பதை மட்டுமே அந்த இராஜாவிடம் சொன்னார். இவர் சொன்னதில் பாதி உண்மை இருந்தது. தனக்கும் சாராளுக்கும் ஒரு வாரிசு பிறக்கும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டும் என்ற ஆபிரகாமின் நோக்கத்தை கர்த்தர் உணர்ந்தவராக இருந்தார். இருந்தாலும், ஒருவேளை ஆபிரகாம் "இவள் என் மனைவி " என்று சொல்லியிருந்தாலும் தேவன் அவரை மரணத்திலிருந்து காத்திருப்பார் என்பதில் யாரும் சந்தேகிக்க முடியாது. ஏனென்றால்,ஒரு இராஜா மற்றவனுடைய மனைவியை தனக்காக அபகரிக்கும் பட்சத்தில் இதுவே பொதுவான தண்டனையாக இருந்தது.

சில நேரங்களில் தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்வது மிக கடினமாக இருக்கலாம், ஆனால் மற்ற நேரங்களில் (வசனம் குறிப்பிடுவது போல "உள்ளதை உள்ளதென்றும் ..") தேவனுடைய சித்தம் மிக எளிதாக புரிந்துகொள்ளப்பட்டாலும், அவைகளை எல்லா நேரங்களிலும் கடைப்பிடிப்பது (ஆபிரகாமை போல )மிக கடினமாகவே உள்ளது.

நம்முடைய பரலோக பிதா, சபையானது முழுமை பெறும் வரையிலும், சாத்தானை முழுமையாக கட்டாமல், சிறிது அளவுக்கு மீதியிருக்கும் சபை மக்களின் விசுவாசத்தை சோதிப்பதற்கு சாத்தானை அவர் அனுமதிக்கிறார். இந்த சோதனைகள் மிக தந்திரமாக சாத்தானால் பிணைக்கப்பட்டு, பின்னப்பட்டு, தேவ பிள்ளைகள் இடறி விழும் படியான நியாயமான சூழ்நிலைகளில் அமைக்கப்படும் இக்கட்டான கன்னிகளாகவே இருக்கும்.

நாம் கட்டாயமாக "பொய் சொல்ல வேண்டும்" என்ற ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு நம்மை தள்ள சாத்தான் முயற்சிப்பான் - இப்படியாக இயேசு சோதிக்கப் படுவதற்காக, "இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அலலவோ ? "(மத்தேயு 22:17) என்று பரிசேயர்களால் ஒரு கேள்வி கேட்கப்பட்டார். இந்த கேள்விக்கு ஒரு வேளை இயேசு ஆம் என்று பதில் அளித்திருந்தால், இவர் இஸ்ரயேலுக்கு இராஜா இல்லை என்பதாக தோன்றிருக்கலாம் - இது ஒரு பொய். ஒரு வேளை அவர் வேண்டாம் என்று பதில் அளித்திருந்தால், சட்டத்தின்படி மன்னிக்கப்படாத ஒரு குற்றமாக இருந்திருக்கும். இது வேறுவிதமான பொய்யாக இருந்திருக்கும்.

ஆனால், சாத்தானுடைய கன்னிகள் இரண்டு தீமைகளுக்கு மத்தியில் கிடைக்கும் வாய்ப்பாக இருந்து, நம்மை மதில் மேல் பூனையாக யோசிக்க செய்கிறது. இங்கு இயேசு ஞானத்தோடு மூன்றாவது வாய்ப்பை பயன்படுத்தி தனக்குமுன் வைக்கப்பட்ட இருதலைக்கொல்லி நிலையிலிருந்து தன்னை காத்துக்கொண்டதை நாம் கவனிக்கவேண்டும். அந்த சூழ்நிலையை மேற்கொள்ள அவர் தேவனுடைய பிரமாணங்களின் மீதும், சித்தத்தின் மீதும் தன்னுடைய கவனத்தை செலுத்தினார். ஆதாவது, "சூழ்நிலை" அவரை பொய் சொல்ல நிர்பந்தம் செய்ய அனுமதியாமல், தாமாக ஒரு கேள்வியை எழுப்பி சூழ்நிலையை மாற்றி உண்மையை சொன்னார்.

நாமும் இயேசுவை பின்பற்ற முயற்சிக்கலாமா....? ஆம்... நிச்சயமாக.

மத்தேயு 5: 38 - 48 - உங்களை துன்பப்படுத்துபவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்.



# சத்துருக்களை நேசியுங்கள்

"...பரலேகத்திலிருக்கிற உங்கள் பிதா......தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்." - மத்தேயு 5:45

முதல் இரத்தசாட்சியாகிய ஸ்தேவான் தன்னுடைய பகைவர்களை நேசித்தார் என்பதை செயலாற்றினார். முதலில் அவர் ஆலோசனைசங்கத்தை பார்த்து, "தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோதிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். "(அப்போஸ்தலர் 7 :52)[1] என்று எதையும் மறைக்காமல் பேசினார். அதற்கு பின் தைரியமாக, "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் ..." என்று சொன்னதின் விளைவாக மூப்பர்கள் பற்களை நெரித்து, ஸ்தேவான் சொன்னதை இவர்கள் கேட்டபொழுது, இவர்கள் அனைவரும் கொன்ற இயேசுவினால் நியாந்தீர்க்கப் படுவார்கள் என்பதை புரிந்துகொண்டார்கள். இதனால் இவர்கள் மூர்க்க வெறி கொண்டு, ஸ்தேவானை கல்லெறிய கட்டளையிட்டார்கள்.

இவைகளை தரிசு ஊரானாகிய சவுல் நிறைவேற்றினான் (சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்.) ஸ்தேவானின் கடைசி வார்த்தைகள் ஜெபமாக இருந்தது. "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்." (அப்போஸ்தலர் 7 :60 ) காலப் போக்கில், தேவன் இந்த ஜெபத்தை ஏற்றுக்கொண்டார். இந்த ஜெபத்தை கேட்ட சவுல், நன்மையடைந்தார். ஆண்டவரின் கடடளையின் பேரில், சவுலின் வைராக்கியம் திசை திருப்பட்டு அப்போஸ்தலனாகிய பவுலாக மாறி புதியஏற்பாட்டின் பாதி புத்தகங்களின் ஆசிரியர் ஆனார்.

இதுபோல் "அப்பொழுது இயேசு - பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்.... " (லூக்கா 23 -34) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கும் இது பொருந்தும். ஆனால் கிட்டத்தட்ட 99 % பெரும்பாலாக கைபிரதிகளில் இந்த வசன பகுதி காணப்பட்டாலும், சிறந்த கைபிரதிகளில் இதை தவிர்த்திருக்கிறார்கள். ஆயினும், இது போன்ற ஒரு காரியத்தை ரோமர் 5 -10 ஆம் வசனத்திலும் வாசிக்கலாம். "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." இதனால், நம்முடைய பகைவர்களிடத்திலும் அன்பாக இருக்க நாம் அதிகமாக கற்றுகொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

ஸ்தேவான் சந்தித்த சூழ்நிலையை நாம் சந்திக்க வாய்ப்பில்லை என்றே கருதிகிறோம். வழியில் குறுக்கிட்ட பொறுப்பில்லாத ஓட்டுனர் வேண்டுமென்றே என்னை குறி வைத்து அப்படிசெய்யவில்லை. ஏனென்றால், அவர் எனக்கு விரோதியல்ல. அதுபோல என் மோட்டார் வாகனத்தின் மீது மோதி அதன் விளக்கை உடைத்தவனோ அல்லது என் மீது தவறுதலாக காபியை சிந்தின சிப்பந்தியோ எனக்கு விரோதி அல்ல.

இப்படியிருக்க, நாம் நேசிக்கவேண்டிய நம்முடைய விரோதிகள் யார் ? ஒரு வேளை அலுவலகத்தில் உள்ள மேலாளர் வேறு வேலைக்கு மாற இருக்கலாம். அலுவலகத்தில் உள்ள வேறொரு நபர் அந்த இடத்திற்கு முன்னேற விரும்பி அதற்கு நான் தகுதியாகிவிடுவேனோ என்று அச்சப்படலாம். விழுந்துபோன மனித சுபாவமானது கூடுமானவரை என்னிடத்தில் குற்றம் கண்டு பிடித்து அதை உலகுக்கு அறிவிக்க அவரை தூண்டலாம்.

இது போன்ற சந்திர்ப்பத்தில் நான் எப்படி நடந்துகொள்கிறேன் என்று கர்த்தர் கவனிக்கிறார். ஒரு வேளை நான் அவனுக்கு அதே பதிலையோ அல்லது அதற்கு மிஞ்சினதை சொல்வேனா ? என்னுடைய விரோதி என்னுடைய முயற்சிகளுக்கான பலனை அனுபவித்தாலும், அந்த நன்மையான முயற்சிகளை தொடர்ந்து செய்ய நான் முயல்வேனா ? அதுபோன்ற சமயத்திலும் அவனுடைய நல்ல குணநலன்களை மற்றவருக்கு நான் அறிவிப்பேனா ?

இது போன்று சமயத்தில் என்னை நானே கேட்பது என்னவெனில், மத்தேயு 5:39 - " உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கண்ணத்தையும் திருப்பிகொடு ." ல் உள்ளபடி நான் நடக்கிறேனா இல்லையா என்பதே ஆகும். இதை கடைசியாக நான் எப்போது செய்தேன் ?

நித்திய ஆக்கினையை சித்தரிக்கும் அநேக உபதேசங்கள் விழுந்துபோன மனித சுபாவத்திற்கு சரியானதாக தோன்றலாம். நம்மை புண்படுத்து கிறவர்களிடம் இரக்கம் பாராட்டாமல் - அல்லது வெறுத்து, தேவன் அவர்களை இதை விட மோசமாக தண்டிப்பார் என்று எண்ணுவதின் மூலம் இதை நாம் நியாயப்படுத்தலாம். இவ்விதமான மனோபாவம் நம்முடைய விரோதிகளை நேசிக்கும் விஷயத்தில் நம்மை வழி விலகச் செய்கிறது. மேலும் இது போன்ற எண்ணங்கள் இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் இருக்கசெய்கிறது.

ஆண்டவரை பிரியப்படுத்த, ஒவ்வொருவரும் நம்மை நாம் மாற்றிகொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் நம்முடைய பகைவர்களை ஆசீர்வதிக்க வேண்டியவர்களாக இருப்பதினால் இப்பொழுது நம்முடைய பகைவர்களை நேசிக்க கற்றுகொள்ள வேண்டும்.

1. எல்லா வசன குறிப்புகளும் அமெரிக்கன் ஸ்டான்டர்டு வெர்ஷனிலிருந்து எடுக்கப்பட்டது. *(American Standard Version)*

2. ஆலோசனை சங்கத்தாரால் தீர்க்கப்படும் மரண தீர்ப்புகள், இயேசு ஊழியத்தை தொடங்கின கிபி 30 ஆம் ஆண்டு ரோமர்களால் நிராகரிக்கப்பட்டது. ஸ்தேவானை கொல்லுவதற்கும் யூதர்கள் மிக கடினமாக ரோமர்களிடம் போராடியிருக்கவேண்டும். கிட்டத்தட்ட 40 வருடங்கள் பின் பிரதான ஆசாரியனாகிய அனனியா சட்டத்திற்கு விரோதமான சிறிய யாக்கோபை கொன்று போட்டான். ரோமர்களுக்கு எதிராக செயல்பட்டதின் காரணத்தினால் அவன் பதவி நீக்கம் செய்யப்பட்டான். இதன் விளைவுகளால் எருசலேம் அழிக்கப்பட்டது.

மத்தேயு 6 : 9 -13 - ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுக்கவேண்டும்

# ஆண்டவருடைய ஜெபம் குறித்த சில சிந்தனைகள்



"நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது....." (மத்தேயு 6:9)[1]

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக."தேவனே முதன்மையானவர் என்ற சிந்தனையை நம்முடைய ஆண்டவராகிய இயேசு, நம்முடைய சிந்தையில் முதலாவதாக பொருத்துகிறார். அதே போல் பழைய ஏற்பாட்டில் மோசேக்கு கொடுத்த முதல் கட்டளை என்னவென்றால், "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்." (யாத்திராகமம் 20:3) அதுபோல்,". ...எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." 1 கொரிந்தியர் 10:31 என்று பவுல் வலியுறுத்துகிறார். யோவான் தனக்கு சகலத்தையும் வெளிப்படுத்தின தூதனுக்கு முன் வணங்கும்படி அவர் பாதத்தில் விழுந்தபொழுது - "நீ இப்படிச் செய்யாதபடி பார்... .. தேவனைத் தொழுதுகொள் என்றான்." (வெளி 22 :8,9)

"உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக." பூமியை சீர்ப்படுத்த, பரலோகத்தின் அரசாட்சி வரவேண்டும் என்று நாம் வாஞ்சிக்கிறோம். இந்த ஆயிர வருட ஆட்சிக்காக கிறிஸ்து மீண்டும் தேவனிடத்தில் ஒப்படைக்கும் நித்திய இராஜ்யத்தை குறித்து நாம் ஜெபிக்க வேண்டும் என்று கிறிஸ்து நமக்கு கற்பித்தாரா என்று நாம் எப்போதாவது கேட்டதுண்டா - ?அல்லது சீர்ப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சி, ஜனங்களின் வழிகளை செவ்வைப்படுத்தி, இரட்சிப்பின் அறிவை கொடுத்து, ஏதேனில் தொலைந்த பரிபூரணத்திற்கு மீண்டும் திரும்பச், செய்யும் என்று நாம் யோசித்ததுண்டா ? இந்த சீர்பொருந்துதல் முழுமையாக நிறைவேற்றப்படும் வரைக்கும் மற்றும் பூரணப்பட்ட உலகத்தின் மனுக்குலம் மீண்டும் ஒரு முறை கொஞ்ச காலம் சாத்தானால் சோதிக்கப்படும் வரைக்கும் தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல இந்த பூமியின் மேல் நடைபெறாது. (1கொரிந்தியர் 15 :24 -28)

"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்"[2] ஆண்டவர் கற்பித்த ஜெபத்தில் "தாரும்" என்ற வார்த்தை இந்த ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நாம் நம்முடைய பரலோக பிதாவை எதற்காக சார்ந்திருக்க வேண்டும் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஆகவே நாம் அழிந்து போகிற "அப்பத்தையா" அல்லது மாம்ச இஸ்ரயேலர்களுக்கு பரலோகத்திலிருந்து மன்னா வர்ஷித்தது போல, தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய அப்பத்தை கேட்கவேண்டுமா ? பெரும்பாலும், நாம் இரண்டு காரியங்களை மட்டும் அல்லாமல், நம்முடைய அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்பட்ட அனைத்தையும் அவருடைய சித்தத்தின்படி கேட்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." இந்த வாக்கியத்தை RV, ASV, NASR, ESV மற்றும் இன்னும் பல மொழிபெயர்ப்புகளை கூர்ந்து கவனித்தால் - தேவன் நம்மை மன்னித்தால், நாம் மற்றவர்களை மன்னிப்போம் என்று வாக்குறுதி அளிப்பதாக அர்த்தமில்லை, மாறாக நாம் தேவனுக்கு முன்பாக மற்றவர்களை மன்னித்து அதற்கு பின் நாம் தேவனிடத்தில் மன்னிப்பை கேட்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இப்படியாக முதலில் நாம் நம்முடைய உத்தமத்தை நிரூபிக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். ("நாங்கள் பிறருக்கு மன்னிக்கிறது போல ... எங்களுக்கு மன்னியும் ) " என்ற பின் வரும் கட்டுரையைக் காண்க)

"எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" இங்கு "தீமை"[3] என்பதற்கான கிரேக்க பதம் poneros. இது தீமையான கிரியைகளை செய்பவனை குறிக்காமல், அந்த தீமையை நீங்கள் ஏன் செய்யவேண்டும் என்பதை காதோடு காதாய் பேசி, உங்களை விட்டு அகன்று தன்னை மறைத்துக்கொள்பவனை குறிக்கும்.

அதற்கு பின் நியாயப்பிரமாணத்தை மறுபதிவு செய்யும் சில பரிசேயர்கள், "இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.."[4] என்ற வார்த்தைகளை இணைத்தார்கள். நான்காம் நூற்றாண்டில், ரோம இராஜ்யம், கிறிஸ்துவின் இராஜ்யமா? இல்லையா ? என்ற சர்ச்சை உண்டாயிருந்தது. மேற்கூறிய இந்த வார்த்தைகள் இந்த காலக்கட்டத்தில் தான் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. ஏனென்றால், கிட்டத்தட்ட ஐந்தாம் நூற்றாண்டு வரைக்கும் இந்த வார்த்தைகள் கைப்பிரதிகளில் காணப்படவில்லை. இந்த வார்த்தை வெவ்வேறு விதங்களிலும் உள்ளது. "உம்முடைய இராஜ்யம் வருக" மற்றும் "இராஜ்யம் உம்முடையது" மேலும், இவ்விரண்டின்படி ஜெபிப்பது முறண்பாடாகவே இருக்கும்.

1. மத்தேயு 6 -9 -13 ஆம் வசனங்களின் வார்த்தைகள் அமெரிக்கன் ஸ்டான்டர்டு வெர்ஷனிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது. ( *American Standerd Version* )
2. கிரேக்க - வரும் நாட்களுக்குரிய எங்கள் ஆகாரம் அல்லது எங்களுக்கு தேவையான ஆகாரம்
3. அல்லது தீமை
4. ஆங்கில பிரதியை பார்க்கவும்.

மத்தேயு 6 :12 -15 - தேவனுடைய மன்னிப்பை பெறுவது



# நாங்கள் பிறருக்கு மன்னிக்கிறது போல.... எங்களுக்கு மன்னியும்

"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." - எபேசியர் 4 :32 ) [1]

Thomas Gilbert

நம்முடைய பரலோக பிதா தகுதியற்ற நம்மேல் வைத்த அளவு கடந்த கிருபையும், இரக்கமும், அன்பும், "..நீதியின் பாதையில்.." (சங்கீதம் 23:3) விலகிச் சென்ற நமக்கு தந்த மன்னிப்பை வெளிப்படுத்துகிறது. ஜீவனை கொடுத்து இந்த மன்னிப்பை சாத்தியமாக்கினார். "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக் கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப் படுவார்கள். " (ரோமர் 5:18, 19)

ஒவ்வொருவரும் இந்த பாவப் பிடியிலிருந்து விடுதலை பெற்றதை உணர்ந்து குற்றம் உணர்ந்த இருதயத்தை பெற்று, தாங்களும் தேவனுடைய உணர்வுகளையும், பெருந்தன்மையையும், மன்னிக்கும் சுபாவத்தையும், மற்றும் அவர் நம்மிடம் நடந்து கொள்ளும் விதங்களையும் பிரதிபலிப்பார்கள் என்று எதிர்பார்த்து தேவன் தன்னுடைய குமாரன் வழியாக பாவமன்னிப்பை அளித்தார். "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் " (எபேசியர் 4 :32) " ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (கொலோசேயர் 3 :12,13)

"கிறிஸ்துவின் உடன் பங்காளிகளாக"(ரோமர் 8:17,கலாத்தியர் 3:16,29) இருப்பவர்கள் இராஜ்யத்தில் மற்றவர்களை உடனடியாக மனப்பூர்வமாக மன்னிக்கும் மனபான்மையுள்ள இருதயத்தை பெற்றவர்களாகவும், ஒப்புரவாக்கும் ஸ்தானாதிபதிகளாகவும் (11கொரிந்தியர் 5 :18-20) இருக்கவேண்டும் என்பது மிக அவசியமானது என்று தேவன் விரும்புகிறார். நாம் நமக்கு எதிராக குற்றம் செய்கிறவர்களை மன்னிக்கிறது போல நாம் தேவ நீதிக்கு விரோதமாக செய்யும் பாவங்களை தேவன் மன்னித்தார் என்பதை கிறிஸ்துவின் இராஜ்யத்தில் சட்டமாக வைத்திருக்கிறார்.

இந்த ஒரு பாடத்தை இயேசு சீஷர்களுக்கு கற்பித்த ஜெபத்தில் வைத்திருக்கிறார். ஏனென்றால் ஜெபிக்கும் போதெல்லாம், நாம் இந்த முக்கியமான பாடத்தை அடிக்கடி தொடர்ந்து நினைவு கூறவேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." இந்த வாக்கியத்தின் விளக்கத்தை இரண்டு வசனங்களுக்கு பின் இயேசு கூறுகிறார் - "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் " (மத்தேயு 6 :12,14,15)

இந்த பாடத்தை தன்னுடைய சீஷர்களுக்கு ஆழமாக கற்று கொடுக்கும்படி ஒரு உவமையை எடுத்துரைத்தார் - "

எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு இராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்த கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான

1. வசனங்கள் அனைத்தும் அமெரிக்கன் ஸ்டான்டர்டு வெர்ஷனிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது

எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி - ஆண்டவனே, என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்து விட்டான்.”

அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து - நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து - என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து - பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்."மத்தேயு 18 : 23 -35

இயேசுவின் முடிவுரையை நாம் பார்க்கும்பொழுது சற்று கடுமையாகவே தோன்றுகிறது. ஆனால் அவருடைய தந்தையின் பார்வையிலிருந்து பார்க்கும்பொழுது எவ்வளவு முக்கியமான பாடம் இருப்பதை இது சுட்டி காட்டுகிறது. "நான் நன்றி அற்றவர்களிடம், அன்பாகவும், உங்களின் ஆதிபாவங்களை மன்னித்து, உங்களுடைய உடன்படிக்கையை அங்கீகரித்து, ஊழியக்காரர்களாக ஏற்றுக்கொண்டு, என் குடும்பத்தில் அங்கங்களாக அழைத்திருக்கிறேன். ஆனால் ஒரு விசேஷமான நோக்கத்திற்காக நான் உங்களை இந்த நிலைக்கு அழைத்துள்ளேன். நீங்கள் மன்னிப்பதற்கும் கிருபையாயிருப்பதற்கும் கற்று கொள்ளா திருந்தீர்களானால், இந்த நிலைக்கு ஒரு போதும் பாத்திரமாகவோ, ஆயத்தமாகவோ இருக்க மாட்டீர்கள். உங்கள் சகோதரர்களின் குறைகளை நீங்கள் மன்னிக்காதிருந்தால் நான் உங்கள் குறைகளை ஒரு போதும் மன்னிப்பதில்லை என்ற இந்த சட்டத்தை உங்கள் நிமித்தமாகவே ஏற்படுத்தினேன். இந்த விதத்தில் மட்டுமே நான் உங்களுக்கு இந்த பாடத்தை கற்று கொடுக்க முடியும் என்பதற்காகவே இந்த சட்டத்தை ஏற்படுத்தினேன். என்னுடைய ஊழியக்காரர்களாக இருக்கும் உங்களிடத்தில் என் குணாதிசயங்களில் உள்ள பரிபூரணத்தை எதிர்பார்க்கிறேன்." ( Reprints, p.4651) என்று தேவன் பேசுகிறது போல் தோன்றுகிறது என்று சகோ. ரசல் குறிப்பிடுகிறார். தெய்வீக குடும்பத்தின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினால் தெய்வீக குணத்தின் முக்கியமான பகுதி - "மன்னிக்கும் மனபான்மையை" நாம் பெற்றிருக்கவேண்டும்.

இரண்டு கடனாளிகள் என்ற உவமையில், இராஜா தேவனை அடையாளப்படுத்துகிறார். நாம் அனைவரும் அவருடைய உழியக்காரர்கள். நாம் தேவனிடத்தில் பட்ட கடனுக்கு அவருடைய குமாரனுடைய ஈடுபலியின் கிரையத்தை கொண்டு நாம் மீட்கப்பட்டு, இன்னும் அநேக சிறப்புரிமைகள் மற்றும் ஆசீர்வாதங்களையும் அனுதினமும் பெற்று கொண்டிருக்கிறோம். இந்த கடன்களை நாம் ஒரு போதும் திரும்பி செலுத்தவே முடியாத. ஒரு வேளை இதற்கு நாம் மில்லியன் டாலர்கள் செலுத்த வேண்டியவர்களாக இருந்து, நாம் தேவனிடம் மன்னிப்பை கேட்டால், தேவன் என்ன சொல்லுவார் ? "உங்கள் கடன்கள் உங்களுக்கு மன்னிக்கப்பட்டது, அதற்கு பதிலாக உங்கள் இருதயங்களை என்னிடத்தில் தந்து விட்டு என் குமாரனை பின் பற்றுங்கள்" என்பார். நம்மை மன்னிப்பதின் மூலம் தேவன் நமக்குள் அவரோடு கூட நெருங்கிய உறவை உருவாக்குகிறார். "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன்

அனுப்பினார். மேலும், நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே, என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய், நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயு மிருக்கிறாய்." (கலாத்தியர் 4: 4 - 7)

மேல் கூறப்பட்ட உவமையில், ஒருவர் இவ்வண்ணமாக மன்னிக்கப்பட்ட பின், அவரிடம் சிறிதளவு கடன்பட்டவரை மன்னியாதிருந்தது நடைமுறையிலும் நினைக்க இயலாதாக இருக்கிறது. அதிகமான கடன் மன்னிக்கப்பட்ட ஊழியக்காரன், தான் பெற்ற இரக்கத்தையும், கிருபையையும் மற்ற சக ஊழியக் காரரிடம் அவர் காட்ட வில்லை என்று தெளிவாகிறது. மன்னிக்கக்கூடிய இராஜாவுக்கும் பொல்லாத ஊழியக்காரர்களுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்த நாம், உடனடியாக - "நம்முடைய பரமபிதா நமக்கு மன்னித்துபோல நாம் மற்றவர்களை மன்னிக்கும் தாராள ஆவியை பெற்றிருக்கிறோமா ? என்ற கேள்வி உடனே நமக்குள் எழும்புகிறது. இந்த உவமையின் முடிவில் இயேசு சொன்னது போல, நாம் தொடர்ச்சியாக ஆராய்ந்து, அந்த நன்றி மறந்த ஊழியக்காரனை போல குணங்கள் இருக்குமேயானால், தொடர்ந்து சுத்திகரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பேதுரு ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பியதால் இயேசு இந்த உவமையை சொன்னார். "அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து - ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும் ? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு - ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 18 : 21,22)

இயேசு சொன்ன பதிலை நாம் பார்க்கும் பொழுது, நாம் மற்றவர்களை எண்ணிக்கையற்ற முறைகள் மற்றவர்களை மன்னிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நிச்சயமாக, தேவன் நம்மை ஏழு எழுபது முறைக்கு மேல் மன்னித்து கொண்டிருக்கிறார் என்று நாம் அறிவோம். அவர் நம்மை மன்னிப்பதற்கு எண்ணிக்கையை குறிக்கவில்லை, அதுபோல் நாமும் மற்றவர்களை மன்னிப்பதற்கு எண்ணிக்கை வைக்கக்கூடாது.

ஒருவர் நமக்கெதிராக குற்றம் புரிந்தால், நாம் எவ்வாறு இந்த காரியத்தை கையாளலாம் ? குறிப்பிட்டபடி, கொலோசேயர்கள் மற்றும் எபேசியர்களிடமிருந்த நாம் வழிநடத்துதலை பெறலாம் -

ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். ஆனால் இதை காட்டிலும் நாம் செய்வதற்கு ஏதேனும் உண்டா ? வசனங்கள் இன்னும் என்ன சொல்லுகிறது ?

"உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள், உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள், அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து - நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். "(லூக்கா17:3,4) என்று இயேசு சொன்னார். முதலாவது தவறுக்கு மனம்வருந்தினால் மட்டுமே, மன்னிப்பை பெற முடியும் என்று இங்கு சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஒரு காரியத்தை நமக்கு எதிராக செய்யப்படும். ஒவ்வொரு குற்றத்திற்கும் நாம் இதை பொருத்தி செயல்பட முடியுமா? இதை குறித்து சகோ. ரசலின் வார்த்தைகளை வாசிக்கலாம் -

> நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுகிற பாவங்கள் பாதிப்பில்லா சாதாரண குற்றங்கள், தீமை பிணைத்தல் மற்றும் கற்பனைகள், வதந்தி மற்றும் அவமானங்களோ அல்ல மாறாக இங்கு சொல்லப்பட்டுள்ளது நமக்கு விரோதமாக செய்யப்படும் நிரூபிக்கப்பட்ட குற்றங்களாகும். இவ்விஷயத்தில் குற்றம் செய்தவரை அன்பாகவும் உண்மையாகவும் கடிந்துகொள்வது, அதன் மூலம் அது நமக்கு வெளிப்பட்டிருப்பதையும், அது நம்மை பாதித்திருப்பதையும் அவருக்கு உணர்த்துவது நமது கடமையாகும். Reprints, p.2296

சில சூழ்நிலைகளில் மற்றவர்களின் வார்த்தைகளினாலும் செயல்களினாலும் நாம் புண்பட்டிருக்கலாம். இம்மாதிரியான குற்றங்களை நமக்கு செய்வதில் வெகு சிலரே காணப்படுகிறார்கள். அதில் அநேகம் உள்நோக்கம் அற்றதாகும். இந்த சூழ்நிலையில் சகோ. ரசலின் ஆலோசனையை வாசிக்கலாம்

> இது போன்ற சாதாரண குற்றங்களில் ஒருவர் (கிறிஸ்தவர்) மிகவும் கிருபையும் அன்பும் உடையாவராயிருந்து அவைகளை கவனத்தில் கொள்ளாமல், கிறிஸ்துவின் நிமித்தம் தேவன் நம்முடைய பாவங்களை பாராமல், அது துணிகரமான பாவமாக இருக்கும் பட்சத்தில் மாத்திரம் கவனத்தில் கொள்வது போல நாமும்

நடக்கவேண்டும். இவ்விதமாக எந்த உள்நோக்கும் இல்லாமல் செய்யப்பட்ட குற்றங்களை கவனியாது இருக்கவேண்டும் என்று கிறிஸ்தவர்கள் தங்களுடைய இருதயத்தில் உறுதி எடுப்பது அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்து தேவனுடைய சாயலை அடையும் இவ்வோட்டத்தில் நிலைத்து நிற்க உதவும். Reprints, p. 2296

நமக்கு எதிராக சொல்லப்பட்ட குற்றம் உள்நோக்கம் உள்ளது என்று அறிந்தாலும், அவைகளினால் நாம் பாதிக்கப்படாமல் இருக்க முடிவு செய்வதற்கு நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். ஆனால், நமக்கு விரோதமாக செய்யப்பட்ட குற்றத்திற்காக நீதி என்ன என்று ஒருவர் கேட்கலாம் ? ஏனெனில், நீதி தேவனுடைய குணலட்சனங்களில் பிரதானமாக இருக்கிறது. அப்படியிருக்க, குற்றம் செய்தவரை நாம் கவனியாமல் இருப்பது தவறாக போய்விடும் அல்லவா ? சகோ. ரசலுடைய ஆலோசனை - " நாம் பாவிகளாயிருந்து தேவ கிருபை பெற்றிருக்கையில், நம்முடைய உடன்சகோதரர்களும் பாவத்தில் விழுந்து போன நிலையில் இருப்பதினால் நாம் நீதி என்ற நிலையை எடுப்பது கூடாத காரியமாக இருக்கிறது. தன்னை நீதிமானென்று நினைக்கிறவன் அந்த நீதியால் நியாயந்தீர்க்கப்படுவான். Reprint, p. 2294

நல்ல குமாரன் கெட்ட குமாரன் உவமையில் இரக்கமும் மனஉருக்கமமான பிதா, மனம் திருந்தி, மன்னிப்பை கேட்டு வரும் முன் நாம் அவர்களை நம்முடைய இருதயத்தில் மன்னிக்கலாம் என்பதை நமக்கு போதிக்கிறார். தந்தையை விட்டு வெளியேறிய குமாரன் தன்னுடைய சொத்துக்களை வினாக்கி, நீதியை செய்ய விருப்பமில்லாமல், தன்னுடைய தவறான செயல்களை உணராமல் இருந்தான் இப்படிப்பட்ட குமாரன் தன்னுடைய தவறுகளை உணர்ந்து திருந்தவேண்டும் என்ற ஒரே காரியத்தை தகப்பன் எதிர்பார்த்தார். பிரிந்த நாள் முதல் தன்னுடைய குமாரன் திரும்புவானா என்று கண்ணுக்கு எட்டின தொடுவானத்தை அவர் ஆவலோடு எதிர்பார்த்துகொண்டிருந்தார். இந்த தகப்பன் தன்னுடைய குமாரனை மன்னிக்க எவ்வளவு ஆவலுடன் இருந்தார் என்பது குறிக்கிறது. தன்னுடைய வாசலை விட்டு வெளியே உடனே, அந்த தகப்பன் அவருடைய குமாரனை மனப்பூர்வமாக மன்னித்திருக்க வேண்டும், என்ற உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். " (ரோமர் 5:8) அதே போல் நாமும் இருக்க வேண்டும். மனப்பூர்வமாக மன்னிக்கும் மனபக்குவம் எப்பொழுதும் நமக்குள் இருக்கவேண்டும். நம்முடைய செயல்களிலும், முகத்தின் வெளிப்பாட்டிலும் அதை காண்பிக்கவேண்டும். இதைத் தவிர நமக்குள்ளிருந்த எந்த உணர்வுகளும் வெளிப்படக்கூடாது, அவர்கள் யாரானாலும் சரி, நமக்கு எதிராக பெரிய குற்றங்கள் புரிந்திருந்தாலும், அனைவரிடமும் மன்னிப்பையும் நல்ல உறவையுமே வெளிப்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

இரக்கம் மற்றும் மன்னிப்பு இவ்விரண்டு பாடங்களை கற்றுக் கொள்ளுவது மிக அவசியமாகிறது ஏனென்றால், நம்முடைய இருதயத்தை சீர் பொருத்த இது ஒரு வல்லமையான கருவியாக பயன் படுத்தப்படுகிறது - நம்முடைய இருதயம் மற்றவர்களை மன்னிக்க, மற்றவர்கள் மன்னிக்கப்பட்டதால் அபூரணத்திலிருந்தும் தவறுகளிலிருந்தும் விடுதலை பெறுகிறார்கள். இதுவே கிறிஸ்துவின் இராஜ்யத்தில் நாம் செய்யும் வேலையாகும், ஆனால் இதை நாம் இப்பொழுதே கற்றுக்கொண்டு பயிற்சி பெற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

சந்தேகத்தில் இருப்பவர்களையும், விசுவாசத்தில் தடுமாறுகிறவர்களையும், கவர்ச்சியான பாவங்களுக்கு இரையானவர்களையும், தீவிரமான பாவ சோதனைகளுக்கு உட்ப்பட்டவர்களையும், கொடூரமான பாவத்தினால், தரக்குறைவாகி, தங்களுடைய நீதியின் சால்வையை கரைப்படுத்தி அழுக்காக்கினவர்களையும் மன்னித்து கருணைக்காட்ட வேண்டும் என்று யூதா (22, 23 ) நமக்கு ஊக்கமளிக்கிறார். "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்." (யாக்கோபு 5: 19,20)

யூதா தன்னுடைய நிரூபத்தை தேவனை துதிக்கும், வாழ்த்துதலோடு நிறைவு செய்கிறார். "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்..." (யூதா 24) தேவன் நம்முடைய எல்லா குற்றங்களையும் மன்னித்ததினால் மட்டுமே நாம் அவருக்குமுன் குற்றமற்றவர்களாக நிற்க திராணியுள்ளவர்களானோம். மற்றவர்களிடம் நாம் உறவு கொள்ளும்பொழுது தேவனை போல் நடந்துகொள்ளலாம். - நமக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களை நாமும் மனப்பூர்வமாக மன்னித்து, நம்முடைய பார்வைக்கு அவர்கள் குற்றமற்றவர்களாக இருப்பது போல நாமும் தேவனுடைய பார்வையில் குற்றமற்றவர்களாயிருப்போம்.

## மத்தேயு 6 : 19 - 34 - முன்னுரிமை மற்றும் சமாதனமும்



# உங்கள் பொக்கிஷங்கள் எங்கேயிருக்கிறது?

"உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." - லூக்கா 12 :34

Larry McClellan

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள், பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள் ... உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்... இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது... தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது." (மத்தேயு 6 :19 -24) என்று இயேசு சொன்னார்.

**பூமியின் பொக்கிஷங்கள்** - இவை என்ன ? செல்வம், புகழ், வல்லமை, செல்வாக்கு, நிலங்கள், சமூக உயர்வு, பெருமையின் வீடுகள், இல்லங்கள் மற்றும் பூமிக்குரிய நண்பர்கள் - இவை அனைத்தும், இக்கால பூமிக்குரிய நம்பிக்கைகள், குறிக்கோள்கள், பேராவல்கள் போன்றவற்றில் ஒரு சில பூமிக்குரிய பொக்கிஷங்களாக கருதப்படுகிறது. உலகப்பொருள் என்றால் என்ன ? நாம் இதேவிதமாக உலக செல்வம் என்றே சிந்திக்கிறோம். ஆனால் பூர்வ காலத்தில், உலகப்பொருள் என்று சொல்லப்பட்டுள்ள மம்மோன் என்பது சீரியர்களின் ஒரு தெய்வமாக இருந்தது. அதை ஐசுவரியத்தின் கடவுள் என்றும், பேராசை நிறைந்த உலகதினத்தின் அவதாரம் என்றும் கருதினர். இன்னும் தெளிவாக நாம் கூறவேண்டுமானால், பூமிக்குரிய நன்மைகளையும், மாம்சீக இன்பங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடிய "சுயநல கொள்கை" தான் உலகப்பொருள் ஆகும். புகழ்பெற்ற தொலைக்காட்சி ஊழியக்காரர்கள் தங்கள் சபையார் ஆவல் நிறைந்த காதுகளோடு இந்த உலக ஜீவியத்தில் எவ்வளவு நன்மைகளையும், பூமிக்குரிய ஐசுவரியத்தையும் உடையவராக இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று சொல்வதை ஒருவேளை நாம் கவனித்திருக்கலாம். "பலி" என்ற வார்த்தை ஒருபோதும் வருவதில்லை (ஊழியக்காரருக்கு காணிக்கை கேட்கும்போது தவிர)

இந்த உலகத்தில் உள்ள அநேகர் உலக செல்வத்தையும் - பணத்தையும் "ஆராதனை" செய்வது போல் தோன்றுகிறது. அவர்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்து தங்களால் என்னவெல்லாம் சம்பாதிக்க முடியுமோ அனைத்தையும் பெற்றுக்கொள்வதை ஒரு தொழிலாகவே கொண்டுள்ளனர். பணத்தை சம்பாதிப்பதற்காக எவ்வளவு பேர் தங்கள் உடல் நலத்தை கெடுத்துக்கொள்கின்றனர். பின்னர் சம்பாதித்த பணத்தை நலிவுற்ற உடல் நலத்திற்கே மீண்டும் செலவு செய்கின்றனர், பணம் அவர்களது விக்கிரகமாக மாறிவிட்டது. இதே மாதிரியான மனப்பான்மை சகோதரத்துவத்திற்குள்ளும் மெதுவாக நுழையும் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார் - "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்." (1தீமோத்தேயு 6 : 9-10)

இதற்கு அளவு உண்டா? இல்லை, ஐசுவரியத்தின் வஞ்சகமானது எப்போதும் எவ்வளவானாலும் போதாது என்பதே.

பூமிக்குரிய ஐசுவரியங்கள் எதுவாயினும் அது நிலையற்றதாக உள்ளதல்லவா ? ஒரே இரவில் மறைந்து போகும் "மாய நீர்க்குமிழிகள்" போன்றவைகள். நண்பர்கள் நம்மை விட்டு உடனே போய் விடலாம். பொதுமக்களின் மன உணர்ச்சி மாறக்கூடியது. வெள்ளத்தினாலோ, தீயினாலோ ஒரு இரவில் உங்கள் வீடுகளை இழக்கலாம். செல்வம், புகழ், பூமிக்குரிய சொந்தங்கள் மற்றும் கனவுகள் போன்றவை சிறிது அல்லது தற்காலிக திருப்தியைக் கொடுக்கும், மேலும் நிறைவேறாத எதிர்பார்ப்புகள் அடிக்கடி மனச்சோர்வை கொடுக்கும். பெருமையாக ஓட்டப்பட்ட அழகான கார்கள், கடைசியில் துருப்பிடித்து, தூர எறியப்படும். கவர்ச்சிகரமான உடை அல்லது ஆடை கடைசியில் அந்துப்பூச்சி அரிக்கிறது அல்லது கிழிந்து கந்தலாகிறது. பூமிக்குரிய பொக்கிஷங்கள் எவ்வளவு மாயமானதாகவும், நிலையற்றதுமாகவும் இருக்கின்றன ,

**பரலோகத்தில் பொக்கிஷங்கள்** - பரலோகத்திற்குரிய அல்லது ஆவிக்குரிய பொக்கிஷங்கள் இக்காலத்திற்கும் இனி வரும் காலத்திற்கும் பயனளிக்கக் கூடியது. "பந்தயப்பொருளை" பெற்றுக் கொள்பவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களின் பிந்தைய ஆவிக்குரிய பொக்கிஷமாக இப்பொழுது பரிசுத்த ஆவி, ஆசீர்வாதங்களின் ஒரு நிகழ்கால பொக்கிஷமாக ஓர் "அச்சாரமாக" கொடுக்கப்பட்டுள்ளது. (எபேசியர் 1 :13, 14, பிலிப்பியர் 3:14) இந்த நிகழ்கால பொக்கிஷங்கள் நிலையானது, நீடிக்கக்கூடியது. எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் நமக்கு காண்பித்த அவரது மாபெரும் அன்பையும், அவருடைய விசேஷ ஐக்கியத்தையும், அவரது தெய்வீக பாதுகாப்பையும் உடன்படிக்கை செய்த நாம் பொக்கிஷமாக பெற்றுள்ளோம். அடுத்ததாக, சபைக்கு பரிந்து பேசுகிறவராகவும் பிரதான ஆசாரியராகவும் இருக்கும் நம் அன்பின் கர்த்தர் இயேசு ஒரு விசேஷமான பொக்கிஷம். "பதினாயிரங்களில் சிறந்தவர்", அவரது விசேஷமான ஐக்கியம் - "மூத்த சகோதரர்" போல நம்மேல் கொண்ட அவரது விசேஷமான அக்கறை அன்பின் தனிப்பட்ட பொக்கிஷம். இவை இரண்டுமே "தெரிந்தெடுக்கப்பட்ட பொக்கிஷங்கள்" ஆகும்

தெய்வீக வாக்குத்தத்தங்களின் இதயமான நமது விசேஷ பொக்கிஷம் ஒன்று இருக்கிறது. "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில்

அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." மேலும் "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே." (கீழ்கண்ட வசனங்களைப் பார்க்கவும்- ரோமர் 8 :28, எபிரெயர் 13:5, சங்கீதம் 34 :15, 1பேதுரு 5:7, பிலிப்பியர் 4: 7, ஏசாயா 26 :3,4, 11கொரிந்தியர் 4:17, ஏசாயா 41 :10 ஏசாயா 54 :17 மற்றும் பல)

கிறிஸ்துவின் சகோதரத்துவத்தில் இப்போது நாம் அநேக பொக்கிஷங்களை பெற்றிருக்கிறோம். எந்த ஒரு நன்மைமையும் உங்களிடம் எதிர்பார்க்காமல் உங்களை பரிவுடன் நடத்தவும் உங்களுக்காக காரியங்களை செய்யும் ஒருவரை நாம் எங்கும் காணமுடியாது. இருந்தபோதிலும், தற்போதைய பரிசுத்தவான்களின் சுதந்திரத்தினால், பெருந்திரளான உடன் சிலுவைவீரர்கள் நமக்கு கிடைத்துள்ளனர். அவர்கள் நம்மை தம்முடைய சொந்த குடும்பமாக பாவித்து, நமக்கு உணவு, உடை மற்றும் இருப்பிடம் தருகின்றனர். இந்த உண்மையான அன்பின் கிறிஸ்தவ சகோதர சகோதரிகள் அவர்களால் முடிந்த எல்லாவற்றையும் உங்களுக்கு செய்வார்கள். அவர்கள் தங்கள் ஜீவனையும் உங்களுக்காக கர்த்தருடைய சித்தமாக இருக்கும் போது நிச்சயம் கொடுப்பார்கள். உங்களுடைய அக்கறை மற்றும் உங்களது உணர்ச்சிகளில் பங்கெடுக்கும் சுயநலமற்ற சகோதரர்களில் ஒரு கூட்டமைப்பாகும். அவர்கள் உங்களுக்கு செய்யும் சில வேலைகள் அல்லது தியாகங்கள் நம் கர்த்தருக்கும் செய்யப்பட்டதென்று அவர்கள் உணர்ந்திருக்கின்றனர்.

**வருங்கால பொக்கிஷங்கள்** - நம் கர்த்தர் நாம் எதிர்பார்த்திருந்ததைப் போல அவரது தெய்வீக சுபாவ பரிசை எதிர்நோக்கியிருந்தார். (11பேதுரு 1:4). மாம்ச வருத்தங்களின் வலியிருந்து விடுதலை பெற்று - பிதாவும் அவருடைய குமாரனும் கொண்டுள்ள - தம்மில் தாமே ஜீவனை உடைய சரீரத்தை நாமும் பெற்று பரலோகத்தின் பிராகாரங்களில் மிகவும் நெருக்கமான குடும்பமாக உயர்த்தப்பட நாம் எவ்வளவு ஏங்குகிறோம். (யோவான் 5:26, ரோமர் 6: 5, 1யோவான் 3:2) நம் கர்த்தர் 1,44,000 ஆகிய புது சிருஷ்டியின் தலையாக மாறும் களிப்பை சந்தேகத்திற்கு இடமில்லாமல் எதிர்பார்ப்போடு காத்திருந்தார். இரண்டாம் ஆதாமாகிய நம் கர்த்தர் தமது ஆவிக்குரிய மணவாட்டியுடன் இணைந்து அதிக வேதனைப்படும் உலக மனுக்குலம் அனைத்தையும் தூக்கியெடுத்து ஜீவனையும் மானிட பரிபூரணத்தையும் திரும்பக் கொடுப்பார். எனவே தான், நாமும் கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரராக மாறும் களிப்பை இரண்டாம் ஏவாளைப்போல எதிர்பார்த்திருக்கிறோம். ஆபிரகாமின் சந்ததியின் ஒரு பகுதியாக இவர்கள் "பூமியின் வம்சங்களை ஆசீர்வதிப்பார்கள்." " "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. " (வெளி 21 :4)

**சமாதான சிந்தை** - எவ்வாறு "விசுவாசமும் நம்பிக்கையும்" இவை எல்லாவற்றிற்கும் சம்பந்தப்படுத்தப்படும்? இயேசு "காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்" என்று நம்மிடம் சொன்னார். (மத்தேயு 6:28) அவை வளர்வதற்காக எதாவது கவலைப்படுகிறதா அல்லது மக்கள் அவற்றைப் பற்றி என்ன சொல்வார்கள் என்று கவலைப்பட்டதுண்டா ? இல்லை. நாம் நெருக்கமான வழியில் செல்ல நாம் எடுக்கும் பிரயாசங்களையும் பலிகளையும் பலவீனப்படுத்தக் கூடிய மனக்கவலை நிறைந்த சிந்தனைகளுடன் பாரப்படுவது அல்லது கவலைப்படுவது கூடாது என்று இயேசு சொன்னார். அவர் நமது சிந்தைகளை "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" என்று ஆவிக்குரிய முக்கியத்துவத்தை நமக்கு தந்து நடத்துகிறார். மேலும் நமது இருதயத்தை பலவீனப்படுத்தும் ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய தேவைகளைக் குறித்து சோர்வடையவோ கவலைப்படவோ வேண்டாம் என்று வலியுறுத்துகிறார். "ஆகையால் நாளைக்காகக் (மனக்கவலை) கவலைப்படாதிருங்கள் நாளையத்தினம் தன்னுடையவை களுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதின்தின் பாடுபோதும். " (மத்தேயு 6 : 33, 34)

நம் தேவைகளையும், நம் துணைவர் அல்லது துணைவியின் தேவைகளையும், நம் குடும்பத்தின் தேவைகளையும் குறித்து கவலை கொள்ளவே வேண்டாம் என்று இந்த வசனம் அர்த்தப்படுத்துகிறதா ? இல்லை. அப்படிப்பட்ட விஷயங்களைக் குறித்து அக்கறை இருக்க வேண்டும். நம் பொறுப்புகளுக்கு ஏற்ப நாம் சரியான முன்னேற்பாட்டை நாம் செய்திருக்க வேண்டும். இருந்தாலும், அக்கறைக்கும் கவலைக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. நமது விசுவாசம் எவ்வளவு பலமாக இருக்கிறது ? இயேசுவையும் தேவனுடைய வாக்குத் தத்தங்களையும் நாம் விசுவாசித்தால், நமது பரலோகப்பிதா இவை எல்லாவற்றிலும் அக்கறை எடுத்துக்கொள்வார். நாம் அதற்கு தேவையான முயற்சி செய்தால் போதும். சிறிய குருவி தான் நீர் அருந்தும்போது எவ்வாறு பரலோகத்தைப் பார்க்கிறதோ அவ்விதமாக நாம் விசுவாத்தில் தேவனை பார்த்தால் நாம் முழுமையாக மனநிறைவோடு இருக்க ஊக்கப்படுத்தப்படுவோம். காட்டு புஷ்பம் தேவனுடைய ஏற்பாடுகளை சார்ந்துக் கொண்டு, தன் வளர்ச்சியை தேவனுடைய சித்தத்திற்கு நம்மை முழுவதும் ஒப்புக்கொடுப்பதும், " உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது." தலைமுடியையெல்லாம் எண்ணிய அவர் நம் "ஆவிக்குரிய" நன்மைக்கு ஏதுவாக எல்லாவற்றையும் நமக்கு கொடுப்பார் என்ற மனநிறைவுடன் பாடுபடுவதுமே நம் இலட்சியமாக இருக்க வேண்டும். நம் ஆண்டவரைப் போல, தேவனுடைய உத்தரவின்றி நமக்கு எதுவும் நடக்காது. (யோவான் 19: 11)

மனித குடும்பத்தின் மிகவும் மோசமான இரு எதிரிகள் "பயம் மற்றும் மனக்கவலை" ஆகும். கிறிஸ்து இதிலிருந்து விடுதலை கொடுக்கிறார். எப்படியென்றால், அடிக்கடி ஜெபம் செய்வதன் மூலமும், தேவப் பாமாலைகளைப் பாடுவதன் மூலமும், மேன்மையான - கிறிஸ்துவில் மறைந்திருக்கும் - நம் பொக்கிஷங்களான - வாக்குத் தத்தங்களை ஞாபகப்படுத்திக் கொள்வதன் மூலமும் நீங்கள் பயங்களையும் மனக்கவலைகளையும் விரட்டியடிக்கலாம். (11தீமோத்தேயு 1: 7, 1யோவான் 4 :18) "உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." ( ஏசாயா 26:3)டானின் பாமாலைகளில் 12ம் பாமாலை இதே கருதுத்தை வெளிப்படுத்துகிறது. "என் இரட்சகர் என்னை எல்லா விதத்திலும் வழிநடத்துகிறார், வேறு என்ன நான் கேட்கவேண்டும் ? என் வாழ்க்கை முழுவதும் என் வழிகாட்டியாக இருக்கும் அவரது கருணையை நான் சந்தேகிக்க முடியுமா ? " எனவே , பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களளைச் சேர்த்துவையுங்கள், .... உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."

மத்தேயு 7:1 -5 - மற்றவர்களை அல்ல நம்மை நாம் நியாயம்தீர்ப்போம்

# நியாயந்தீர்க்காதீர்கள்



"ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை, நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்." - ரோமர் 2:1

Brian Montague

தேவனுடைய வார்த்தை பொதுவாக கீழ்காணும் வசனத்தின் அடிப்படையில் மனித குடும்ப ஒத்து கொண்டாலும் மனுக்குலத்தின் வழிகளுக்கும், விருப்பத்திற்கும் எதிராகவே இருக்கிறது."நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீக்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள், நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." (மத்தேயு 7:1,2)

Krino (கிரீனோ - ஸ்டிராங்கஸ் -2919) என்ற கிரேக்க வார்த்தையை நியாயத்தீர்ப்பு என்று மொழிபெயர்க்கப்படிருக்கிறது. இதற்கு மன அளவில் அல்லது சட்டத்தின்படி முடிவுசெய்தல், குற்றம் சாட்டுதல், தண்டிப்பது அல்லது கேள்விக்குட்ப்படுத்துவது என்று பொருள்படும். வருங்காலத்தில் அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்படும் மகிமையான நியாயத்தீர்ப்புக்கு (Krino) என்ற கிரேக்க வார்தைதை பயன்படுத்துப்பட்டிருக்கிறது. (மத்தேயு 19 : 28 ) தனிப்பட்ட முறையில் இன்றைய காலத்தில் கிறிஸ்தவர்கள், மற்றவர்களை குற்றவாளிகளாக நியாந்தீர்ப்பதை தவிர்க்கவேண்டும். ஏனென்றால் நாம் இப்பொழுது இருக்கும் அபூரணமான நிலையில் மற்றவர்களின் மனநிலையை முழுமையாக புரிந்துகொள்ள முடியாது.

நாம் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல், மற்றவர்களை நியாந்தீர்ப்பது எவ்வாறு சாத்தியாகும் ? ஒருவருடைய சரீரத்தின் தோற்றம், உடை, வசிக்கும் இடம் அல்லது வெளிப்படையான பெலவீனத்தை வைத்து நாம் அவரின் மனநிலையை கணிக்க முடியுமா ? நம்முடைய கிறிஸ்துவ சகோதரர்களை பொருத்த வரையில், அவர்கள் யாரோடு உறவு வைத்திருக்கிறார்கள் என்றும், அவர்களை பற்றி மற்றவர்கள் என்ன வெளிப்படையாக சொல்லியிருக்கிறார்கள் என்பதை வைத்து அவர்களை நியாந்தீர்த்து விடுகிறோம். மனரீதியாக எந்த ஒரு கிறிஸ்துவ விசுவாசியையும் நாம் முழுமையாக அறிந்து அவருக்கு இறுதித் தீர்ப்பை கொடுக்க முடியுமா ?

### பழைய ஏற்பாட்டிலிருந்து பாடம்

மற்ற ஜாதிகளுக்கு இராஜா இருப்பது போல எங்களுக்கும் ஒரு இராஜா தேவை என்று இஸ்ரயேல் மக்கள் முறையிட்டதால், சாமுயேல் இஸ்ரயேலர்களின் கடைசி நியாயாதிபதியானார். இப்படிப்பட்ட ஏற்பாட்டின் கீழ் இஸ்ரயேலர்கள் பிரச்சனைகளை சந்திக்க வேண்டும் என்ற எச்சரிப்பை அவர்களுக்கு கொடுத்த பின் தேவன் அந்த விண்ணப்பத்தை ஏற்றுகொண்டார். இப்படியாக, மனித நியாயத்தீர்ப்புகள் தேவனுடைய தீர்ப்புகளுக்கு என்றுமே வேறுபட்டதாக இருந்தது. (ஏசாயா 55:8,9)

பென்யமீன் கோத்திரத்தில் கீஸ் ஒரு செல்வாக்கு நிறைந்த மனிதனுக்கு சவுல் என்ற ஒரு குமாரன் இருந்தான். "அவனுக்குச் சவுல் ......இஸ்ரயேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை, எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். "(1சாமுயேல் 9:1,2) என்று இவரை குறித்து பேசப்பட்டது. சவுல் ஒரு செல்வாக்கான குடும்பத்திலிருந்து வந்ததாலும், பார்வைக்கு பலசாலியாக இருந்ததினாலும், இஸ்ரயேலின் முதல் இராஜாவாக சவுல் தேர்வு செய்யப்பட்டபின் ஜனங்கள் அனைவரும் மிகுந்த சந்தோஷத்தில் மூழ்கினார்கள். சவுலின் வெளிப்புறமான தோற்றத்தை வைத்து இஸ்ரயேலுக்கு ஒரு ஏற்ற அரசனாக இருப்பான் என்று ஜனங்கள் எதிர்பார்த்தார்கள். (1சாமுயேல் 10 :24) இவ்வண்ணமாக, இஸ்ரயேலர்களை போல, வெளிப்புறமான தோற்றத்தை வைத்து முடிவுக்கு வந்தால் நம்முடைய கனிப்பும் தவறாகிவிடும்.

சவுலின் அவிசுவாசமான நடக்கையினால், காலபோக்கில் இஸ்ரயேலை ஆள ஒரு புது இராஜாவை

நியமிக்க வேண்டும் என்று தேவன் சாமுயேலிடம் கூறினார். பெத்லகேம் ஊரானாகிய ஈசாயின் குமாரர்களிலிருந்து இந்த இராஜாவை தேர்வு செய்யும்படி தேவன் அனுப்பினார். அவருடைய முதல் குமாரனாகிய எலியாபை கண்டவுடன், இவரே தேவனால் தேர்வு செய்யப்பட்ட இராஜாவாக இருக்கவேண்டும் என்று சாமுயேல் மனதில் யோசித்தார். "கர்த்தர் சாமுயேலை நோக்கி - நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம், நான் இவனைப் புறக்கணித்தேன், மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன், மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்." (1சாமுயேல் 16: 7 )

தேவன் நம்முடைய விருப்பம் மற்றும் சித்தத்தின் படியே நம்மை பார்க்கிறாரே தவிர, நம்முடைய மாம்ச சிந்தையின் படி அவர் நம்மை என்றுமே காண்கிறவரக இருக்கிறார். (ரோமர் 8:8) நாம் மற்றவர்களின் மாம்ச சிந்தையை வைத்து ஒருவரை நியாயந்தீர்த்தால் அல்லது நாம் சந்தித்து பேசினவைகளை வைத்து நம்முடைய சிந்தை சொல்லுவதை வைத்து நியாந்தீர்த்தால் நாம் குழப்பம் அடைந்திருக்கிறோமா என்று அனைவராலும், சந்தேகிக்கப்படுவோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசு பாவிகளோடும், ஆயக்காரரோடும் இருப்பதை ஏளனம் செய்த பரிசேயர்களிடம் இதைக் காணலாம்."அவர் அவர்களை நோக்கி - நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார், மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது."(லூக்கா 16 :15)

வெளிப்படையான தோற்றத்தை வைத்து சகோதரர்களை நியாயந்தீர்ப்பதை குறித்து யாக்கோபு சபைக்கு பொருத்தமட்டில், ஒரு எச்சரிப்பை கொடுத்திருக்கிறார். ஆதிகால சபைகளின் கூட்டங்களில் யார் எந்த பொறுப்பை ஏற்று கொள்ளவேண்டும் என்ற விஷயத்தில் பாரபட்சமாக நடத்தினார்கள். இதை வன்மையாக யாக்கோபு எதிர்த்தார். - "உங்களுக்குள்ளே பேதகம் பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயி ருப்பீர்களல்லவா? "(யாக்கோபு 2:4)அல்லது ஜே. பி. பிலிப் வார்த்தைகளில் - "இது நீங்கள் உங்கள் இருதயத்தில் வேற்றுமை உணர்வை வளர்த்து, தவறான நோக்கங்களினால் ஒருவருடைய தன்மையை நிதானிக்க முயற்சிப்பதை நிரூபிக்கிறது அல்லவா? இவ்விதமான, எண்ணம் உடையவர் "அயலாரை கனம் பண்ணுங்கள்" என்ற தெய்வீக பிரமாணத்திற்கு செயல்படுவதை குறிக்கும். இதை பின்பற்றாமல் இருப்பது நமக்கு நன்மையாகும்.

## அங்கீகரிக்கப்பட்ட தெய்வீக நியாயந்தீர்ப்பு

"நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும் போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்." (1கொரிந்தியர் 11:31, 32)

இந்த சூழ்நிலையில் நம்மை நாம் நியாயந்தீர்ப்பதே ஏற்றதாக இருக்கும் என்று பவுல் கருதுகிறார். இதை நாம் செய்ய தவறினால், ஆண்டவர் நம்முடைய பாவத்திற்கு தக்கதாக நமக்கு தண்டனை அளிப்பார். தண்டனையின் மூலம் தூய்மைப்படுத்தும் செயல் சீக்கிரத்திலும் வரலாம் அல்லது காலம் அமைதியாக கழிந்து விடும் வரை அவை வெளிப்படுத்தப்படாமலும் இருக்கலாம். ஆகவே இவைகள் தோன்றும்பொழுது, நாம் உடனடியாக தவறுகளை சரி செய்யவேண்டும். இவைகளை நம்முடைய வாழ்க்கையில் நடப்பித்தால், தேவனுடைய பார்வையில் நாம் வளர்ச்சியடைகிறவர் களாயிருப்போம்.

அதே சமயத்தில், தனி நபர்களின் வெளிப்புற தோற்றத்தை வைத்து நியாயந்தீர்ப்பதற்கு நாம் எந்த வித அதிகாரமும் பெறவில்லை. ஆனால் சபை சில விஷயங்களை குறித்து முடிவெடுக்க அதிகாரம் பெற்றுள்ளது. பவுல் கொரிந்து சபையில் நடந்த விபசாரத்தை குறித்த காரியங்களை விவாதித்து, பகிரங்கமாக துணிந்து செய்து வந்த தவறை சுட்டிகாட்டி, அவரை சபையை விட்டு நீக்காததற்கு மிக கடினமாக கண்டித்தார். **"நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறதுபோல,** இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறதுபோல, நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக் கையில், அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய

இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன்." (1கொரிந்தியர் 5:3) என்று பவுல் தீர்ப்பளித்தார். இப்படிப்பட்ட பயங்கரமான முறைகேடான நடத்தை விட்டு அவர்கள் மனம்வருந்தி, சீர்பொருந்தும் வரைக்கும் நாம் அவரை விட்டு விலகியிருக்கவேண்டும். (1கொரிந்தியர் 5 :11, 11தெசலோனிக்கேயர் 3 :14,15 11கொரிந்தியர் 2:1 -11)

சகோதரர்கள் மத்தியில் உள்ள வழக்குகளை நாம் என்றுமே உலகத்தானுடைய நியாயந்தீர்ப்புக்கு (நீதிமன்றம்) எடுத்து செல்லக்கூடாது. இதற்கு பதிலாக இரண்டு சகோதரர்களுக்கு மத்தியில் உள்ள பிரச்சனைகளை உங்களுக்குள்ளே ஞானமுள்ளவர்களை கொண்டு தீர்த்துகொள்ளக்கூடாதா என்று பவுல் கேள்வி எழுப்புகிறார். இப்படிப்பட்ட சகோதரர், ஜெபத்தில் தரித்திருந்து, தேவனுடைய சித்தத்தை அறிந்து, எல்லாவற்றிற்கும் மேலாக, அன்பின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். (ரோமர் 12 : 10)

ஒரு சகோதரன் வழக்குக்காக நீதிமன்றத்திற்கு சென்றால் என்ன செய்யவேண்டும் என்ற கேள்விக்கு பவுல் விளக்கம் அளிக்கிறார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா ? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா ? (1கொரிந்தியர் 6 : 2) ஒரு கிறிஸ்துவ கடமையானது. பூமியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டத்திட்டங்களுக்கு கீழ்படுவதில் உள்ள கிறிஸ்தவர்களுக்கான கடமையானது வேத கொள்கைகளுக்கு விரோதமானது அல்ல. (மத்தேயு 22 : 21)

வரும் யுகத்தில் தெய்வீகமான காரியங்களுக்கு நியாயாதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்களாக இருப்போமேயானால், இக்காலத்தில் பயனற்ற காரியங்களை நியாயம் விசாரிக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும் அல்லவா? நீதிமன்றங்களை பொருத்தமட்டில், தங்களுக்கு அளித்த சட்டத்தின்படியே நியாயந்தீர்ப்பார்கள். நீதி விசாரிப்பவர்களின் விஷயத்தில், நீதிமன்றமானது அவர்களுக்கு சட்டங்களை பயன்படுத்தி சொல்லவேண்டிய தீர்ப்பை முடிவு செய்யும் அதிகாரத்தை பெறுகிறது. இப்படிப்பட்ட பொறுப்பிற்கு நாம் உயர்த்தப்பட்டால், வேத வசனங்களில் படி இது நமக்கு அங்கீகரிக்கப்பட்டிருப்பதாக முடிவு செய்யலாம். Reprints, p. 1531

இருந்தபோதிலும், இவ்விதமான நியாயவிசாரிப்பு வேலைகளை ஒருவர் புறக்கணிக்க முடிவு செய்து அந்நியராகவும், பரதேசிகளாகவும் இருக்க தேர்வு செய்து, இவ்விதமான பூமிக்குரிய காரியங்களில் பிணைக்கப்படுவதை தவிர்க்கலாம். வேதத்திலிருந்து வேறு விதமான ஆலோசனைகள் இல்லாத பட்சத்தில் ஒருவர் தன்னுடைய மனசாட்சிக்கு ஏற்றபடி தேர்தெடுக்கும் சுயாதீனம் உள்ளவராக இருக்கிறார். (ரோமர் 14 : 1 - 15 :7).

நியாயத்தீர்ப்பின் பயனுள்ள, அதாவது தேவனுடைய பார்வையில் நன்மையான பங்கை நாம் இப்பொழுது விசுவாசத்தோடு பயிற்சி செய்தால், கிறிஸ்து தன்னுடைய வருங்கால, பூமிக்குரிய இராஜ்யத்தில் (யோவான் 5- 22) நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்வதற்கு பாத்திரமானவர்களை முடிவு செய்யும் பணியில், அவரோடு இணைந்து பணிபுரிய, உதவியாக இருக்கும். இப்பொழுது திரைக்கு இந்த புறம் (மாம்சத்தில் உள்ள சபை மக்கள்) இல்லாதவைகளை , திரைக்கு அப்பால் (ஆவியின் சரீரத்தில்) பெற்றுக்கொள்வோம். அதாவது நீதியின் கோட்பாடுகளை கீழ்ப்படிவதற்கான மற்றவர்களின் சிந்தை மற்றும் இருதயத்தின் நோக்கத்தை சீர்த்தூக்கி பார்க்கும் திறமையை பெற்றுக்கொள்வோம். அது வரைக்கும், நீதியின் கோட்பாடுகளுக்கு எல்லாவற்றிலும் நாம் இசைந்து வாழ ஜெபித்துகொண்டே இருக்கவேண்டும். "மேலும், உத்தமானவைகளை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி,நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர் களுமாயிருக்கவும் வேண்டுதல்செய்கிறேன்." (பிலிப்பியர் 1 : 9-11) இந்த அன்பின் ஆவியானது, நாம் ஒவ்வொரும் கூடுமானவரைக்கும் பரலோக பிதாவை மகிழ்விக்க, ஏவக்கடவது.

## மத்தேயு 7:13 -27 - ஆவியின் கனி

# அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்



"கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள், உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்..." - மத்தேயு 7:15,16 [1]

Wade Austin

இந்த வார்த்தைகளை புரிந்துகொள்ள லூக்காவின் அறிக்கையையும் இதனோடு ஒப்பிட்டுபார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். "குருடனுக்கு குருடன் வழிகாட்டக்கூடுமோ ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா ? சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்." (லூக்கா 6 :39,40) "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள், உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். .." (மத்தேயு 7 :15,16)

இயேசு குருடர்கள், பட்சிக்கிற ஓநாய்கள் மற்றும் கனிகளை பற்றி பேசினார். இந்த மூன்று உருவகங்களை முழுமையாக ஆராய்ந்து பார்த்தால் மட்டுமே, கள்ள போதகர்களை கண்டறிய இயேசு சீஷர்களுக்கு போதித்தார் என்பதை நாம் கற்றுக்கொள்ள முடியும். முதலாம் உருவகமாக இயேசு குருடரை வழிகாட்டும் குருடரை பற்றி பேசினார். அடுத்து ஆட்டு தோல் போர்த்தின ஓநாய்களை கள்ள தீர்க்கதரிசிகளுக்கு ஒப்பிட்டு பேசினார். கடைசியாக, கள்ள தீர்க்கதரிசிகளை நல்ல கனிகளை கொடாமல், விஷக்கனிகளை தரக்கூடிய மரத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார். மேலும், அவைகளை வெட்டி அக்கினியில் போடப்பட வேண்டும் என்றும் சொன்னார். இயேசு தன்னுடைய மாணவர்கள் "ஆசிரியர்களாக இருப்பார்கள்" என்பதால் கள்ளப்போதகர்களை குறித்து சீஷர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார். போதகர்களின் கனிகளை ஆராய்ந்த பின், அவர்கள் கள்ளதீர்க்கதரிசிகளா, பட்சிக்கிற ஓநாய்களா அல்லது கெட்ட கனிகளை கொடுக்கும் மரமா என்பதை நிதானித்து விடலாம்.

கனிகள் குணங்களை குறிக்கிறது. இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு கனிகளை ஒரு குறிப்பாக பயன்படுத்தினார்கள். ஒருவருடைய நீதியான இலக்கு தேவனுடைய சித்தத்தை செய்வதின் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது என்று இயேசு தெளிவுப்படுத்தினார். தேவனுடைய நாமத்தில் போதித்து மிகப் பெரிய காரியங்களை செய்ததாக கோரினாலும் கெட்ட கனிகளை கொடுக்கும் எவரும் தேவ சித்தத்தை செய்ய இயலாது. "அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் .." (மத்தேயு 7:23 ) என்பதை இயேசு வருங்காலத்தில் பகிரங்கமாக அவர்களை நோக்கி சொல்லும் அறிவிப்பாக இருக்கும். ஏனென்றால், ஒவ்வொரு சீஷரும் இயேசுவால் நியமிக்கப்படும் போதகர்களாக உருவாக்கப்படுவதால், ஒவ்வொரு சீஷனும் தன்னுடைய போதகரை குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று இயேசு கற்பித்தார்.

நம்முடைய ஆண்டவர் நமக்கு ஆசிரியர்களை நியமித்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அவர் எழுதின நிருபத்தின் மூலம் நமக்கு கற்றுகொடுத்திருக்கிறார். "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனி குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அவைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும்,

1. நியூ இன்டர்நேஷனல் வெர்ஷன் (NIV)

அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது. " (எபேசியர் 4:11 -16)

நமக்கு போதகர்கள் தேவை என்பதை இவ்வசனங்கள், வலியுறுத்துகிறது. இந்த திட்டவட்டமான விளக்கவுரை என்னவென்றால், போதகர்கள் நல்லொழுக்கமுள்ள போதனைகளை அன்பின் அடிப்படையில் தரக்கூடிய முக்கியமான பொறுப்புகளை பெற்றவர்கள் என்று அறிவிக்கிறது. இதை ஒழுங்கின்படி நடைமுறைப்படுத்தும்பொழுது, நிச்சயமாக, ஒருவருக்கொருவர் அன்பினால் தாங்கி நல்வழிப்படுவார்கள். ஆவிக்குரிய கனியின் அடிப்படையான கனி - அன்பாகும். இந்த அன்பு இல்லாத போதகர்கள், தங்களுடைய சீஷர்களுக்குள் இந்த கனியை பயிற்சிக்க முடியாது. பவுல் எழுதும்பொழுது - " அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்." (1கொரிந்தியர்13:4-8) அனைத்து கனிகளிலும் உள்ள அற்புதமான குணத்தை குறித்து நமக்கு கற்று கொடுத்தார்.

தங்களுடைய மிகப் பெரிய கிரியைகளை குறித்து மேன்மைபாராட்டும் போதகர்கள் தாங்கள் மகிமைப்பட விரும்புகிறார்கள். அவர்களின் கனிகள் கெட்டுபோனவைகள் என்பதை அவர்களின் பெருமையும், இருமாப்பான மனப்பான்மையும் வெளிப்படுத்துகிறது. நிச்சயமாக, இவர்கள் இயேசுவின் சரீரத்தை மகிமைப்படுத்த முடியாது, ஏனென்றால், **இவர்கள் மகிமைப்பட** உண்மையான ஊழியம் செய்கிறார்கள். காலங்கள் நிறைவேறும்பொழுது, அண்டி வந்த மந்தையை தங்களுக்குள் கட்டுப்படுத்த, பொறாமை, கோபம், முரட்டுத்தனம் மற்றும் பொறுமை இழந்த நிலையையும் படிப்படியாக மந்தையிடம் வெளிப்படுத்துவார்கள். இறுதியில், தங்களை பின்பற்றும் மந்தையின் ஆவியை கெடுத்து,தங்களை போலாக்கி, பேராவலுடன் அழித்துவிடுகிறார்கள். இவர்கள் மந்தையை பிரித்து, தேவனிடம் இழுத்துச் செல்லாமல், தங்கள் வசமாக நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட போதகர்கள் மற்றும் அவர்களை பின்பற்றுபவர்களுக்கும், உண்மையான ஆடுகளுக்கு உள்ள வித்தியாசத்தை குறித்து இயேசு கீழ்வருமாறு கூறினார் - "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக - அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை, என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது. ஆனாலும், நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என்மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள். என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார், அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். " (யோவான் 10 :25 -30)

சபையாகிய சரீரத்திற்குள் பிரிவுகளை ஏற்படுத்தும் போதகர்கள், தேவனுடைய கரத்திலிருந்து மந்தையை பிடுங்க முயற்சிக்கும் இவர்கள் நிச்சயமாக சரீரத்திற்குள் ஒருவருக்கொருவர் நல்வழிப்படுத்தி, அன்பினால் போஷிக்கவோ, அன்பின் அடிப்படையில் ஊக்குவிக்கவோ முடியாது. வித்தியாசமான போதனைகள் மற்றும் வேறுப்பட்ட நடக்கைகளுக்கும் உள்ள முக்கியமான காரணத்தை குறித்தும், போதகர்களுக்கு உண்டான முழு பொறுப்புகளை குறித்தும் யாக்கோபு தன்னுடைய நிரூபத்தில் எழுதுகிறார் - "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. " (யாக்கோபு 3:1) அதற்கு பின் அவர் ஆவிக்குரிய ஞானம் மற்றும் உலகத்தின் ஞானத்தில் உள்ள வித்தியாசத்தை சுட்டிகாட்டினார். "உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இருதயத்திலே கசப்பான

வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள், சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக் கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே சகலமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு. "(யாக்கோபு 3 :13 -16)

நல்லொழுக்கத்தை அன்பின் அடிப்படையில் போதிக்காத ஞானத்தை "ஆவிக்குரிய வளர்ச்சியற்றது" என்று யாக்கோபு கூறுகிறார். இப்படிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சியற்ற போதகர்களின் ஞானம் சரீரத்தை வளர்க்காமல், பட்சித்து பீறீட்டு, முற்றிலும் நாசமாக்கிவிடுகிறது. மந்தையை காக்க வேண்டியவைகள் அதை பீறீட்டு புசிக்கும் ஓநாய்களை போல இவர்களும் செயல்படுகிறார்கள். ஆவிக்குரிய ஞானத்தை பெற்ற போதகர்கள் சரீரத்தை கட்டி காத்து, பேணி வளர்க்கிறார்கள். ஆவிக்குரிய ஞானம் முதலில் தூய்மையாக உள்ளது என்று யாக்கோபு விவரிக்கிறார். அடிப்படை சத்தியத்தை விட்டு சிறிதளவே வேறுப்பட்ட சிலருக்கு, கற்று கொடுத்து அவர்கள் கற்றறிந்த தவறான உபதேசங்களை சுத்திகரிக்கலாம். ஆனால் யாக்கோபின் வார்த்தைகளில் சொல்லப்பட்டவைகள், நடத்தை அல்லது ஒரு நபரின் ஆவிக்குரிய சாட்சிகளை மட்டுமே வைத்து ஆவிக்குரிய ஞானத்தை குறித்து பேசுகிறாரே தவிர வரிசைப்படுத்திய வசன விளக்கவுரைகளை வைத்து அல்ல. ஒரு போதகர் அன்பை போதிக்கும் முன் அவர் மற்றவர்ளை நேசிக்கவேண்டும். இவர் மற்றவர்களை நேசிக்கும் முன் தனக்குள் இருக்கும் சகல விதமான கசப்பையும், பகைகளையும் தன்னுடைய இருதயத்திலிருந்து பிடிங்கி எரிய வேண்டும்.

நம்முடைய போதகர்கள், தேவனை விட்டு விட்டு தங்களையே மேன்மைப்படுத்திக்கொள்வதை நாம் பார்க்கும் பொழுது நாம் என்ன செய்ய வேண்டும் ? "நான் மூப்பர், (பொதுசபைகள், வீடுகளை ஸ்தாபிப்பது அல்லது மாநாடுகள்)நான் செய்வது உங்களுக்கு விருப்பமில்லை என்றால், நீங்கள் வெளியேறலாம் ...." என்ற வார்த்தைகளை நாம் காதார கேட்டால் நாம் என்ன நடவடிக்கை எடுப்பது. இப்படிப்படட வார்த்தைகள் சபைகளை என்றுமே நல்வழிப்படுத்தாமல் பிரிவினைகளை ஏற்படுத்தும். இது கெட்ட கனிகளாக இருந்து மரம் கெட்டதாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. காலம் வரும் பொழுது தேவன் அதை வெட்டி போடுவார். ஆனால் இன்று நாம் என்ன செய்ய வேண்டும் ?

இதை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் பொழுது - "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்." (ரோமர் 16:17) என்று ஆலோசனை கூறுகிறார். இந்த அறிவுரையானது, நாம் எந்த விதத்திலும், பிரிவினைகளுக்கு காரணமாக இருக்கக்கூடாது என்பதை நாம் நம்மையே ஆழமாக ஆராய்ந்த பார்த்து, ....சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூறும் குணம் நம்மில் இருக்கிறதா என்று நம்மை நாமே சோதித்து பார்ப்பது மிக அவசியம். (1பேதுரு 1-22)நமக்குள் இப்படிப்பட்ட சுத்த இருதயம் இருக்குமானால் யாக்கோபு அவருடைய நிரூபத்தில் குறிப்பிட்டபடி "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது. " (யாக்கோபு 3:17,18) ஆவிக்குரிய ஞானத்தின் கனிகள் நமக்குள் இருக்கிறதா என்று நாம் நம்மையே ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவ்வகையான கனிகள் நமக்குள் இருப்பதை நாம் கண்டால், நமக்குள் இருக்கும் ஆவிக்கு விரோதமான ஆவியை பெற்ற போதகர்களையும், தலைவர்களையும் பின் பற்றாமலிருக்க முடிவு செய்யலாம். நாம் ஜெபத்தின் வழியாக தேற்றுதலையும் நம்பிக்கையும் பெறலாம் . " நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக, அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். " (எபிரெயர் 13:20,21)

## தீர்க்கதரிசனத்தில் இன்று

# அமெரிக்கா ஒரு புதிய தலைவரை தேடுகிறது.



**2008** ஆம் ஆண்டின் அமெரிக்க அதிபருக்கான தேர்தல் மிக முக்கியம் வாய்ந்தாக இருந்தது. தங்கள் வரலாற்றிலேயே ஆப்பிரிக்கா -அமெரிக்கா அதிபரும் துணையதிபராக ஒரு பெண் பதவி ஏற்பதும் இதுவே முதல் முறை. இது அமெரிக்க வரலாற்றின் மிக முக்கியமான திருப்புமுனை என்று அநேக கருத்துக்கணிப்பாளர்கள், கருத்து தெரிவித்துள்ளனர். மாற்றங்களை குறித்து பேசுகின்ற ஆட்சியாளர்களிடத்தில் மிகுந்த ஆர்வம் கலந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுவருகின்றது.

கடந்த செப்டம்பர் 11, 2001, முதல் தனிமனித பாதுகாப்பு மையம், பொருளாதாரத்தில் ஒரு நிலையில்லாத சூழ்நிலையும், அதிகரித்துள்ளது. ஆப்கானிஸ்தான் போர் முடிந்து இப்பொழுது எட்டாம் வருடத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். ஈராக் போர் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்து விட்டது. இப்பொழுது ஈரான் போரை பற்றிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. ரஷ்ய நாடு தங்கள் அண்டை நாடுகளை பயமுறுத்த துவங்கியுள்ளது. வடகொரிய நாடு அணு ஆயுத கையிருப்பு அதிகாரம் பெற ஆயத்தமாகி வருகின்றது. அதே சமயத்தில் அமெரிக்க பொருளாதாரம் , பணவீக்கத்தாலும், விலையேற்றத்தினாலும் சரிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

தம்முடைய இரண்டாவது துவக்க உரையில் முன்னால் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கூறுகையில், எந்த ஒரு கட்சியும் சமூக போரை, அதாவது அதன் தாக்கத்தையோ அல்லது அந்த போர் நடந்து முடிந்த கால அளவையோ விரும்புவதில்லை என்று கூறினார். ஒவ்வொருவரும் சுலபமான வெற்றியை எதிர்நோக்குகின்றனர், ஆனால் அதன் முடிவோ அடிமட்டமான பல அதிர்ச்சிகளை கொடுத்தது. போர்கள் எதிர்பார்த்திராத வழியின் பல மாற்றங்களை கொண்டுவருகிறது. அநேக சம்பவங்கள் கட்டுபாடில்லாமல் அதிகரிக்கின்றது. மாறுதலுகளும், மாற்றங்களும் வாழ்க்கை முறையாகிவிட்டது. புதிய அதிபர் இந்த சூழ்நிலையில்இருந்து விடுபட வழி வகுப்பாரா ?

### அரசியல் அமைப்புகள் முயற்சி செய்தும் தோல்வியை சந்தித்து விட்டது.

அநேக அரசியல் அமைப்புகள் , யுடோப்பியா (Utopia) என்ற ஆங்கில கவிதைக்கு ஏற்ப சமாதானத்தை கொண்டு வர வாக்கு கொடுத்தும் தோல்வியை சந்தித்து விட்டனர். ஒவ்வொரு அமைப்புகளும் சமாதானத்தின் பொற்காலத்தை கொண்டு வர முயன்று, சோர்ந்து விட்டனர். முக்கியமாக அவர்களே நாளடைவில் காணாமல் போய்விட்டனர்.

- **மன்னர் ஆட்சி**

கடந்த 1800 வருடங்களாக உலகில் அநேக மன்னர் ஆட்சிகள் வீழ்ந்து விட்டது. இப்பொழுது 44 நாடுகளில் மாத்திரம் மன்னர் ஆட்சி செய்யும் அல்லது அரசாளும் அமைப்புள்ளது. முதலாம் உலக போருக்கு முன்பாக பன்னிரெண்டு மடங்காக இருந்த மன்னராட்சி இன்று வெறும் ஏழாக உள்ளது. இதில் வாட்டிகன் நகரமும் அடக்கும்.

- **ஒரு சிறு குழுவால் ஆட்சி செய்யப்படுவது.**

இந்த சொல்லின் அர்த்தம் என்வென்றால் ஒரு சிலரால் ஆட்சி செய்யப்படும் ஆளுகை இத்தகைய ஆட்சி முறையில் அதிகாரம் நிறைந்த சில குடும்பங்கள் அதிகாரத்தை தங்கள் கைகளில் எடுத்து மாறுதல்களை கொண்டுவந்தனர். இதன் சிறந்த சமீபத்திய எடுத்துகாட்டு தென்னாப்ரிக்காவின் இணை ஒதுக்கீட்டின் அடிப்படையிலான ஆட்சி, இதில் கருப்பின குடி மக்கள் கொல்லப்பட்டோ அல்லது சிறையிலோ அடைக்கப்பட்டனர்.

- **உயர் குடி மக்கள் ஆட்சி**

இது ஒரு கிரேக்க சொல்லில் இருந்து உருவானது. இதன் அர்த்தம் சிறந்த அதிகாரத்தை உடையவர் என்பதாகும். 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பிட்ட உயர் குடி மக்கள் ஆட்சி இங்கிலாந்திலும் பிரட்ன்ச் நாட்டிலும் நடைபெற்றது. பிரட்ன்ச புரட்சி இத்தகய ஆட்சி முறைமைகளுக்கு அதாவது தங்கள் பிறப்பு உரிமையை தகுதியாக வைத்து, ஆட்சிக்கு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

- **சர்வாதிகாரம்**

நம்முடைய நாட்களில் சர்வாதிகாரத்தில் உள்ளவர்கள் தன்னாட்சி செய்கின்றவர்களாக சமூக அமைப்புகள், அரசியல் அமைப்புகள் மற்றும் சட்டங்களால் கட்டுபாடில்லாத ஒரு ஆட்சி புரிந்தனர். ஹிட்லர், ஸ்டாலின், மற்றும் மாசிதுங் ஆகியோருடைய ஆட்சி அநேகருக்கு மிக பயங்கரமாக இருந்தது. இன்றும் சிம்பாபே அதிபர் ராபட் முகாபி ஆட்சி தம் சர்வாதிகார ஆட்சியின் அதிகாரத்தை உபயோகித்து அவரை எதிர்க்கின்ற நபர்கள் யாராக இருந்தாலும் அழித்து வருகின்றதாக இருக்கின்றது.

- **சமத்துவம்**

காரல் மாக்ஸின் கொள்கைகள் பிரபலமாக, 19 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, பிரட்ன்ச் மற்றும் ஜெர்மனி சமத்துவ கொள்கையை செயல்படுத்த வழி வகுத்தது. முதலாம் உலக போருக்கு பின்னர் சமத்துவம் மாற்றம் கண்டு

இதன் தொடர்ச்சி பின்பக்க உள்அட்டையில் . . .

குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் தீவிரவாதம் தலைத்தூக்கியது. பெரிய வர்த்தக கூட்டமைப்புகள் லெனின் பிரகடன படுத்தி உழைப்பாளிகளின் உரிமைகளின் செயல்படுத்தியது. இரண்டாம் உலக போரின் முடிவில் சமத்துவ கொள்கை ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தின் அமெரிக்க நாடுகளில் அதிகமாக வளர துவங்கியது. ரஷிய நாட்டில் கம்யுனிசம் வளர ஆரம்பித்தது.

- **கம்யுனிசம்**

1516 ல் தாம்ஸ் மோர் என்ற கவிஞரின் உட்டோபியா என்ற கவியில் சாதி, இணம், அந்தஸ்து, என்ற பாகுபாடில்லாத சமத்துவம் இல்லாத ஒரு உலகத்தைகுறித்து வெளிப்படுத்தியுள்ளார். தனிப்பட்ட விதத்தில் எந்த ஒரு பயனும் இல்லாத காரணத்தினால் கம்யுனிசம் எல்லா இடங்கிலும் குறிப்பாக ரஷியா, போலாந்து , ஹங்கேரி மற்றும் ஸெக் ரிப்பபிளிக் போன்ற நாடுகளில் இருந்து தூக்கி எறிய பட்டது. இஸ்ரயேல் நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வேறு நாடுகளுக்கு குடிபுகுந்தவர்களுக்கு மாத்திரம் இந்த கம்யுனிச ஆட்சியின் மூலம் சில லாபங்கள் கிடைக்கபெற்றது.

- **ஜனநாயகம்**

ஜனநாயகம் இன்று தேசங்களின் நிலைக்க துவங்கியுள்ளது. நாட்டின் குடி மக்கள் தங்கள் நாட்டின் ஆட்சி அமைப்பில் நேரடியாக இடம் பெறும் ஒரு முறைமையை 123 நாடுகள் பின் பற்றி வருகின்றது. அதிலும் 40 நாடுகள் 1972 பின்னர் இந்த முறைமையை தழுவ துவங்கியுள்ளது. அநேக ஜனநாயக நாடுகளில் பல முக்கிய கட்சிகள் அத்தியாவிசைய தேவைகளுக்கு தக்க சட்டத்திட்டங்களை மாற்றி பணம் படைத்தவர்களையும் செல்வாக்கு நிறைந்தவர்களையும் லாபம் காண செய்தது.

- **அரசு இல்லாத முறை**

அரசு இல்லாத ஆட்சி முறை இல்லாத ஒரு நிலை ஆதிக்கம் நிறைந்த அதிகாரத்திலிருந்து விடுப்பட்ட ஒரு வெற்றிஅமைப்பாக 1900 ல் எழும்பியது. இந்த ஒரு நிலைமை எந்த ஒரு நாட்டிலும் உள்நாட்டு போருக்கு வித்திடும். உள்நாட்டு பிரிவுகள் ஒருவரை ஒருவர் எதிர்த்து போரிடுவது போன்ற காரியங்கள் தலைமை இடத்தை பிடிப்பதற்காக நிகழும். இன்றைய ஆப்கானிஸ்தான் இந்த ஒரு நிலைமைக்கு ஒரு சிறந்த எடுத்து காட்டு.

நாம் இருக்கின்ற இந்த நாட்களை குறித்து இயேசு கிறிஸ்து விளக்குகையில் இவ்வாறு கூறுகின்றார். "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும், பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும், சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். (லூக்கா 21:25). ஆங்கில வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள Perplexity(பெர்பெலெக்சிட்டி) என்ற வார்த்தை கிரேக்க மொழியில் அப்போரியா ( ***Aporia*** ) என்று அழைக்கப்படுகிறது. இதன் அர்த்தம்" நஷ்ட்டத்திலிருந்து மீண்டு வருவதற்கான வேறு வழியிலை" . எல்லா அரசு அமைப்புகளும் நிலையான , சமாதானம் மற்றும் செழுமையான ஆட்சியை கொண்டுவருவதற்கு முடியாமல் தோல்வியடைந்து விட்டன. எல்லா ஜனங்களுக்கும் நன்மை விளைவிக்கக்கூடிய ஆட்சியை ஒரு சிலரால் தர விருப்பமில்லை (முடியவில்லை) என்பதே இதன் முக்கிய காரணம் . ஒவ்வொரு முறை புதிய தேர்தல்கள் நடைபெறும் பொழுது இந்த நிலை மாறும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வருகின்றது.

தேவனுடைய இராஜ்யத்தினால் மட்டுமே இந்த எல்லா குறைபாடுகளுக்கு ஏற்ற நிவாரணம் தர முடியும் . இதை குறித்து ஏசாயா திர்க்கதரிசி இவ்வாறு கூறுகிறார் "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்...... சமாதானப்பிரபு என்னப்படும்.... தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்டிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை, சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்." (ஏசாயா 9 : 6,7)

இயேசு மறுபடியும் எதற்காக திரும்பி வர வேண்டும் என்பதை ஆகாய் 2: 7 இல் வாசிக்கிறோம்.

இபபொழுது தேவன் தேசங்களை அசைத்து தம்முடைய நிலையான இராஜ்யத்தை ஸ்தாபிக்க ஆயத்த வேலைகளை செய்து வருகிறார்." ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார். (சங்கீதம் 72 : 8)

மிக தொலைவில் இல்லாத ஒரு குறித்த தருணத்தில் தேவன் இவ்வுலகில் எந்த அரசியல் அமைப்பின் ஆட்சி இருப்பினும் அதற்கு ஒரு முடிவை ஏற்படுத்தி தம்முடைய குமாரன் மூலமாக தம் ஆட்சியை இப்பூமியிலே ஸ்தாபிப்பார். தெய்வீக திட்டத்தின் கீழ் இயேசு தம் சபையின் மூலம் இவ்வுலகம் எதிர்பார்த்து கொண்டிருக்கிற சமாதானத்தையும் செழிப்பையும் கொண்டு வருவார்."...பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமூகத்தில் தொழுதுகொள்ளும். இராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறவர். (சங்கீதம் 22:27,28)

தேவனுடைய தற்சொரூபமான இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய நிலையிலிருந்து தம்முடைய பூமிக்குரிய பிரதிநிதிகள் மூலமாக நிலையான சமாதானம் நிறைந்த எல்லோருக்கும் நித்திய ஜீவன் வழங்கும் படியான ஒரு வாய்ப்பை ஜனங்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அவர்களுக்கு தருவார். நாம் அந்த நாளை எதிர்நோக்கியிருப்போமாக !